விடுதலைப்புலிகள்

குரல்: 30 வைகாசி - ஆனி 1992 அன்பளிப்பு: ரூபா 5.00

# இராணுவத் திட்டத்தின் அரசியல் நோக்கங்கள்

**வடதமிழீழத்தில் சில கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறீலங்காவின் படைத்துறைத் தலைமை திட்டமிட்டுள்ளது.**

**இந்த இராணுவத் திட்டத்திற்குப் பின்னால் தமிழ்இனத்திற்குக் கேடு விளைவிக்கக்கூடிய பல அரசியல் நோக்கங்கள் இருக்கின்றன.**

**இந்த இராணுவத் திட்டத்தின் பிரதான அரசியல் நோக்கம் தமிழரின் தேசியபலத்தைச் சிதைத்துவிடுவதுதான்.**

**அதாவது தமிழீழத்திற்குக் குறுக்காக இரண்டு இடங்களில் இராணுவ வேலிகளை அமைத்து, தமிழீழத்தை மூன்று இராணுவ வலயங்களாகப்பிரித்து, படிப்படியாக ஒவ்வொரு வலயத்திற்குள்ளும் பலத்தைப் பிரயோகித்து புலிகளை அழித்து தமிழ்த் தேசியத்தின் முதுகெலும்பை உடைக்க, சிங்கள அரசு திட்டமிட்டுள்ளது.**

**இந்த இராணுவத் திட்டத்தைப் பல கட்டங்களாக நடைமுறைப் படுத்த முடிவுசெய்துள்ளது. இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை இரண்டு இராணுவ நடவடிக்கைகளை நடாத்தியுள்ளது.**

இரண்டு வருடமாக நடைபெற்றுவரும் தொடர்ச்சியான விடாப்பிடியான இராணுவ நடவடிக்கைகள்மூலம் சிங்கள அரசால் எதையும் சாதிக்க முடியாத நிலையிலும் கூட போரைத் தொடர்ந்து நடாத்த சிங்கள அரசு முடிவு செய்துள்ளது.

தற்போது, பாரியதொரு இராணுவத் திட்டத்தை நடாத்தி முடிக்க சிங்களப் படைகள் தயார்ப்படுத்தப் பட்டுவருகின்றன.

புவியியல்ரீதியாக, வடதமிழீழத்தில் கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த பகுதிகளில் முப்படைகளின் உதவியுடன் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு - அப்பகுதிகளைக் கைப்பற்றி அங்கே தரைக்குக் குறுக்கே இராணுவ வேலிகளை அமைக்கத் திட்டம் தீட்டியுள்ளது.

இதன்மூலம் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கான புலிகளின் படைநகர்வுகளைத் தடுத்து, அவ்வப்பகுதிகளுக்குள் புலிகளை முடக்கி, ஈற்றில் அழித்துவிடும் நோக்குடன் இந்த இராணுவத் திட்டத்தைச் சிங்கள அரசின் படைத்துறைத் தலைமை தீட்டியுள்ளது.

இத்திட்டத்தின்படி வட - தென் தமிழீழத்தை இணைக்கும் மணலாற்றுப் பகுதியையும், யாழ். குடாவை வன்னி - நிலப்பகுதியுடன் இணைக்கும் கொம்படிப்பகுதியையும் கைப்பற்றி தமிழீழத்தை மூன்று வெவ்வேறு இராணுவ வலயங்களாக்கத் தீர்மானித்துள்ளது

அதாவது, தென்தமிழீழம் ஒரு வலயமாகவும் வன்னி - மன்னார்ப் பகுதிகள் இன்னொரு வலயமாகவும், யாழ். குடா நாட்டைத் தனியொரு வலயமாகவும் வைத்திருக்க சிங்கள இராணுவபீடம் விரும்புகின்றது.

இப்பாரிய இராணுவத் திட்டத்தின் பிரதான அரசியல் நோக்கம் யாதெனில் தமிழரின் தேசியபலத்தைச் சிதைப்பதுதான்.

தென்தமிழீழத்தை வடதமிழீழத்திலிருந்து நிரந்தரமாகத் துண்டித்து, தென்தமிழீழத்தைச் சிங்களமயப்படுத்துவது இந்த இராணுவத்திட்டத்தின் ஒரு நோக்கம் ஆகும். அதன்மூலம் தென்தமிழீழத்தைத் தமிழர்களிடமிருந்து அபகரித்து; அங்கே புலிகளையும் இராணுவரீதியாகப் பலவீனப்படுத்தி, அவர்களின் அரசியல் முக்கியத்துவத்தைச் சிதைத்துவிடுவதன்மூலம் தமிழ்த்தேசிய பலத்தை முறியடிக்கலாம் என, சிங்கள அரசு கருதுகின்றது.

எந்த வழிமுறைமூலமாவது தென்தமிழீழத்தைத் தமிழர்களிடமிருந்து பறித்துச் சிங்களமயமாக்குவதுதான், சிங்களப் பேரினவாத சக்திகளின் உடனடி நோக்கமாகும். இந்த நோக்கை அடைவதில் பிரதான சிங்கள அரசியல் கட்சிகளுள் எந்தவித கருத்து பேதமுமில்லை.

இந்த இராணுவத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டால், இன்று அரசியல் அரங்கில் அடிபடும் வட - கிழக்கு இணைப்பு என்ற பேச்சை இல்லாமல் செய்யலாம் என்பது, சிறீலங்கா அரசின் கணிப்பு.

வட - கிழக்கு இணைப்பைத் தடுக்கவேண்டுமாயின், முதலில் புலிகள் கிழக்கில் ஆதிக்கம் பெறுவதைத் தடுக்க வேண்டும் எனக் கருதுகின்றது.

வட - கிழக்கிற்கான தரைத் தொடர்புகள் இருக்கும் வரை கிழக்கில் புலிகளின் ஆதிக்கத்தைத் தடுக்க முடியாது என்று, சிங்களப் படைத்துறைத் தலைமை நம்புகின்றது.

ஏனெனில், தேவையான நேரத்தில், தேவையான பொருட்களை வடக்கிலிருந்து புலிகள் கிழக்கிற்கு எடுத்துச் சென்று, சிங்களப்படைக்கெதிராக வெற்றிகரமாகப் போரிட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என, அது கருதுகின்றது.

ஆகவே இதைத் தடுத்து நிறுத்த விரும்புகின்றது. மணலாற்றுப்பகுதியூடாகவே கிழக்கிற்கான தரைத்தொடர்பு உண்டு. எனவே மணலாற்றுப் பகுதியை முழுமையாகக்கைப் பற்றி, அங்கே பலத்தைக் குவித்து, தரைக்குக் குறுக்காக ஒரு இராணுவ வேலியை அமைத்து புலிகளின் பாதையைத் தடுக்கலாம் எனச் சிங்களத் தளபதிகள் நம்புகின்றார்கள்.

இதன்காரணமாக, மணலாற்றுப் பகுதியில் பாரியதொரு இராணுவ நடவடிக்கையைச் செய்து முடிப்பது, இந்த இராணுவத்திட்டத்தின் ஒரு அங்கம்.

அதேசமயம், வடக்கிலுள்ள புலிகள் தங்களது பலத்தைத் திரட்டி மணலாற்றில் அமைக்கப்படும் இராணுவ வேலியை உடைத்து விடுவார்கள் எனவும், இராணுவத் தலைமைப் பீடம் அஞ்சுகிறது.

எனவே, குடாநாட்டுக்குள்ளிருந்து உதவிகள் மணலாற்றைச் சென்றடைவதைத் தடுக்க விரும்புகிறது.

அதற்காக குடாநாட்டை வன்னியுடன் இணைக்கும் நிலப்பரப்பாகிய கொம்படியில் ஒரு இராணுவ நடவடிக்கையைச் செய்து, வெற்றிலைக் கேணியிலிருந்து ஆனையிறவுத் தளம் வரையுள்ள பகுதியை ஊடறுத்து ஒரு இராணுவ வேலியை அமைத்து, புலிகளை முடக்க விரும்புகின்றது.

இவ்விதமாக மூன்று தனித் தனி வலயங்களுக்குள் புலிகளை முடக்கி, அவர்களின் போரிடும் ஆற்றலைச் சிதைத்து, புலிகளைப் பலவீனப்படுத்துவதன் மூலம் கிழக்கை எதிர்ப்பின்றிச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

## புலிகளின் குரல்

# தமிழீழ அரசியலும் தமிழ்க் குழுக்களும்

சுமார் 9ஆண்டுகளுக்கு முன்னர் - 1983ஆம் ஆண்டு - இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சியொன்று ஏற்பட்டது. அவ் எழுச்சியால் உந்தப்பட்ட பல்நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் சிங்கள அரசிற்கெதிராக ஆயுதப் போராட்டக் களத்தில் குதித்தனர்.

இதேவேளை, இந்திய ஏகாதிபத்தியத்தின் பிராந்திய நலன்களைப் புறக்கணித்தபடி மேற்குலக ஏகாதிபத்தியங்களுக்குச் சேவகம் செய்து கொண்டிருந்த சிறிலங்கா அரசைத் தனது பக்கம் திருப்பி எடுக்க, அல்லது பழிவாங்க, ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தபடி இந்திய ஏகாதிபத்தியம் காத்துக் கிடந்தது.

இலங்கைத் தீவில் சிங்கள அரசிற்கெதிராக ஏற்பட்ட ஆயுத எழுச்சியைத் தனக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பமாக இந்தியா கருதியது.

இந்தச் சூழ்நிலையில் தமிழ்ப் போராளிகளை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, சிறிலங்கா அரசுக்கு ஒரு நெருக்கடியைக் கொடுத்து, அதன்மூலம் இலங்கைத் தீவில் தனது நலன்களைப் பேண இந்திய ஏகாதிபத்தியம் முடிவு செய்தது.

அதற்காக, முதலில் தமிழ்ப் போராளிகளைத் தனது பக்கம் கவர்வதற்கு பல்வேறு தந்திரோபாயங்களை மேற்கொண்டது.

☆ ஆயுதப்பயிற்சி, ஆயுதஉதவிகள் என்ற தூண்டிலைப் போட்டது.

☆ இந்தியா என்ற பிராந்திய வல்லரசின் ஆலோசனையுடனும், ஆதரவுடனும் நடைபெறும் போராட்டமே வெற்றி பெறும் என வேதாந்தம் பேசியது.

☆ இந்திய ஏகாதிபத்தியத்தின் அன்பையும், நம்பிக்கையையும் பெறும் தலைமைதான் விடுதலைப் போராட்டத்திற்கும் தலைமைதாங்கும் தகுதியுடையது என ஓதியது.

இதன் காரணமாக இந்தியாவுக்கு விசுவாசமாக இருப்பது யார் என்ற போட்டியில் பெரும்பாலான தமிழ்க் குழுக்கள் ஈடுபட்டன.

விளைவு, விடுதலைப் புலிகள் அமைப்பைத் தவிர, பெரும்பாலான தமிழ்க் குழுக்களின் தலைமைகள் இந்திய ஏகாதிபத்தியத்தின் சதிவலைக்குள் விழ்ந்தன.

இதன் காரணமாக, தமிழீழ மக்களின் நிரந்தர நலன்களை முன்னிறுத்திப் போராடுவதற்குப் பதிலாக இந்திய ஏகாதிபத்தியத்தின அபிலாசைகளுக்கு ஏற்றவாறு. இத்தமிழ்க் குழுக்கள் செயற்படத்தொடங்கின; காலப்போக்கில் படிப்படியாக, இந்திய ஏகாதிபத்தியத்தின் பொம்மைகளாகின.

இவ்விதமாக, தமிழீழ விடுதலையை நோக்கமாகக் கொண்டு போராட வந்த இளைஞர்களை உள்வாங்கிய இத் தமிழ்க் குழுக்களின் தலைமைகள் தங்களது கொள்கைகளைத் துறந்து, தமிழ் இளைஞர்களை தமிழீழ மக்களின் நலன்களுக்கு எதிராக தவறாக வழிநடாத்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் - தமிழீழ மக்களுக்கும் - துரோகம் புரிந்தன.

இவ்விதமாக எமது விடுதலைப் போராட்டத்தில் ஒரு துரோகக் கூட்டத்தை இந்திய ஏகாதிபத்தியம் உருவாக்கி, அதைத் தனது கூலிப்படையாகப் பயன்படுத்தத் தொடங்கியது.

இந்திய ஏகாதிபத்தியம் விரித்த தந்திர வலைகளுக்குள் சிக்காது, தலைவர் *பிரபாகரன்* அவர்கள் புலிகள் இயக்கத்தைச் சரியான பாதையில் வழிநடாத்தினார். சிங்களப் பேரினவாதப் பேயிடமிருந்து எமது மக்களை மீட்டெடுத்து இந்திய ஏகாதிபத்தியப் பூதத்திடம் ஒப்படைக்க, தலைவர் பிரபாகரன் தயாராக இருக்கவில்லை. அத்துடன் இந்தியாவின் கூலிப்படையாக மாறி எமது மக்களுக்குத் துரோக மிழைத்த தமிழ்க் குழுக்களை மக்கள் மத்தியில் நாங்கள் இனங்காட்டி, மக்களை விழிப்படையச் செய்தோம்.

இதனால் புலிகள் மீது இந்திய ஏகாதிபத்தியம் சினங்கொண்டது. புலிகள் இயக்கத்தின் மீது அரசியல் ராஜதந்திரரீதியில் அடுத்தடுத்து அழுத்தங்களைப் போட்டு, பணிய வைக்க முயன்றது. அவை கைகூடாததினால், இறுதியில் தமிழீழத்தின் மீது படையெடுத்துப் புலிகளை அழிக்கப் போர்தொடுத்தது.

அப் போர்க்காலத்தில் தனது கைக்கூலிகளான இத் தமிழ்க் குழுக்களை நிர்வாகத்தில் இருத்தி, அவர்கள் மூலம் தனது ஆட்சியை நடாத்த இந்திய ஏகாதிபத்தியம் பகீரத முயற்சி எடுத்தது.

ஆனாலும் எமது மக்களின் ஒத்துழைப்புடன் விரஞ்செறிந்த- உறுதி கொண்ட-ஒரு போர்மூலமும் எமது ராஜதந்திர நடவடிக்கைகள் மூலமும் இந்தியப் படைகளை தமிழீழத்தை விட்டு அவமானகரமாக வெளியேற்றியதும், உலகம் அறிந்ததே.

இந்தியப் படை தமிழீழத்தில் இருந்தபோது இத் தமிழ்க் குழுக்களினால் ஏராளமான மக்கள் கொலை செய்யப்பட்டார்கள். இத்தகைய குழுக்களில் அங்கம் வகித்த பல்நூற்றுக்கணக்கானோர் இந்திய ஆக்கிரமிப்புக்கு முன்னரும்சரி- பின்னரும்சரி - இவர்களது தலைமைகளினாலேயே உட்கொலைகள் மூலம் அழிக்கப்பட்டனர். இந்திய ஏகாதிபத்தியத்தின் ஏவலை ஏற்று எம்மைக் கொல்லவந்த சிலர் சண்டைகளில் இறந்துள்ளனர்.

இவ்விதமாக ஆயிரக்கணக்கான மக்களினதும் - இளைஞர்களினதும் சாவுகளுக்கு இத் தமிழ்க் குழுக்களின் தலைமைகளே காரணமாக இருந்து வந்துள்ளன.

இந்தியப் படைகளின் வெளியேற்றத்தின் பின்னர் இக்குழுக்கள் இந்தியாவுக்கும், கொழும்புக்கும் தப்பியோடின.

கொழும்புக்குத் தப்பிவந்த தமிழ்க் குழுக்களில் சிலவற்றை சிறிலங்கா அரசு தத்தெடுத்தது.

இந்திய ஏகாதிபத்தியம் தமிழீழ மக்களின் தன்னாட்சிப் போராட்டத்திற்கெதிராகப் பயன்படுத்திய இத் தமிழ்க் குழுக்கள் சிலவற்றை- 1990ஆம் ஆண்டிற்குப் பின்னர் சிங்கள அரசும் பயன்படுத்தத் தொடங்கியது.

இந்த ரீதியில் - இன்று - கொழும்பை மையமாக வைத்து இயங்கிக்கொண்டிருக்கும் தமிழ்க் குழுக்கள் சிங்கள அரசினது கைக் கூலிகளாக, இருந்து, தமிழ் மக்களுக்கெதிராக இயங்கிக்கொண்டிருக்கின்றன.

அதே சமயம் இந்திய ஏகாதிபத்தியமும் தனது மறை கரங்களால் இத் தமிழ்க் குழுக்களை இயக்கிக் கொண்டிருக்கின்றது.

ஆயுத அரசியலிலிருந்து ஜனநாயக நீரோட்டத்துக்குள் திரும்பியவர்கள் என்ற மகுடத்தைச் சூட்டி, இத் துரோகக் குழுக்களுக்கு இரு ஆக்கிரமிப்புச் சக்திகளும் சேர்ந்து ஓர் அரசியல் முலாம் பூசியுள்ளன.

இவ்விதமாக, தங்களுக்குத் தேவையேற்படும் போதெல்லாம் இந்திய அரசும் சிங்கள அரசும் இத்தமிழ்க் குழுக்களைக் கூலிப்பட்டாளமாகப் பயன்படுத்துவதுடன், இவர்களைப் பகடைக்காய்களாக வைத்து அரசியற் சதுரங்கம் விளையாடி உலகை ஏமாற்றுவதுடன், சந்தர்ப்பத்திற்கேற்றாற்போல் முகமூடிகளை அணிவித்து அரசியல் பொம்மலாட்டங்களிலும் ஈடுபடுத்துகின்றன.

இந்திய ஏகாதிபத்தியம் இத் தமிழ்க் குழுக்களை வைத்து மாகாண சபை என்றொரு நாடகத்தை அரங்கேற்றி, தமிழீழ தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்று கண்டுவிட்டதாக, சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முயன்றது.

இந்திய ஏகாதிபத்தியத்தின் தந்திரோபாயத்தைப் பின்பற்றி சிங்கள அரசும் இத்தமிழ்க் குழுக்களைத் தங்கள் நலனுக்காகப் பயன்படுத்தத் தொடங்கியது.

தமிழீழத்தில் சிங்களப் படைகள் நடத்தும் இராணுவ நடவடிக்கைகளிலெல்லாம் பங்குகொண்டு, தமிழ் மக்களைக் கொலைசெய்து, தமிழீழ மக்களின் தன்னாட்சிப் போராட்டத்தை ஒடுக்க எதிரியுடன் சேர்ந்து இத்தமிழ்க் குழுக்கள் செயற்படுகின்றன.

ஆனால் இத் துரோகக் கும்பல்களையே தமிழர்களின் ஜனநாயக அரசியல் சக்திகளென சிங்கள அரசு பிரகடனப்படுத்துகிறது; இத்துரோகக் கும்பல்களையே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என உலகிற்குக் காட்ட முற்படுகின்றது.

இவர்களிடம் தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுக்குக் கருத்துக்களையும் - ஆலோசனைகளையும் - வேண்டிநிற்பதாகப் பறைசாற்றுகின்றது.

உண்மை என்னவென்றால் இவர்களிடம் தெளிவான, உறுதியான கொள்கைத் திட்டம் எதுவுமில்லை; மாறாக, தத்தம் எஜமானர்களது கருத்துக்களையே இவர்கள் பிரதிபலிக்கின்றார்கள்.

தமிழ்க் குழுக்கள் என்னும்போது இவர்கள் இரண்டு வகையினராக உள்ளனர். ஒரு வகையினர் தேர்தல் மூலம் தமிழ் மக்களால் தூக்கியெறியப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, மற்றும் தமிழ்க் காங்கிரஸ் போன்ற பழைய மரபுவாத தமிழ்க் கட்சிகள்; அடுத்த வகையினர், ஈ. பி. ஆர். எல். எவ்., ரெலோ, ஈ. பி. டி. பி., புளொட் போன்ற ஆயுதக் கும்பல்களாகும்.

சிறிலங்காவும் - இந்தியாவும் இத் தமிழ்க் குழுக்களைக் கருவிகளாகப் பயன்படுத்தி தத்தமது தேசிய - பிராந்திய- நலன்களை அடைய முயல்கின்றன.

இந்த நாடுகளின் தேசிய-பிராந்திய-அபிலாசைகளுள் முக்கியமானதொன்று புலிகளையும் - தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் ஒடுக்குவதுதான்.

இந்த நோக்கத்தை அடைவதற்கு இத்தமிழ்க் குழுக்களை அரசியல்ரீதியாகவும், இராணுவரீதியாகவும் இவ்விரு ஆக்கிரமிப்புச் சக்திகளும் பயன்படுத்துகின்றன.

இதற்குப் பிரதி உபகாரமாக பதவியும்-பணமும்- நிர்வாகப்பொறுப்புக்களும் கிடைக்கும் என இத்தமிழ்க் குழுக்கள் நம்பவைக்கப்பட்டுள்ளன.

சிவில் நிர்வாகம் என்றபெயரில், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிக்குள் இத் தமிழ்க் குழுக்களை வைத்து சிங்கள அரசு ஒரு நாடகத்தை நடாத்திக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

இவ்விதம் இந்திய ஏகாதிபத்தியம் தனது பிராந்திய நலன்களை அடைவதற்காக தமிழ்ப் போராளிகளைப் பயன்படுத்த எடுத்த தந்திரோபாய நடவடிக்கைகளுக்குப் பலியாகிய இத் தமிழ்க் குழுக்கள், தமிழ் மக்களைக் கொலை செய்து - தமிழீழவிடுதலைப் போராட்டத்தையே காட்டிக்கொடுத்தன. இன்று எமது இனத்தின் ஜென்ம விரோதியான சிங்கள அரசின் கைக்கூலியாக நின்று, அதன் ஆயுதப்படைகளுடன் சேர்ந்து.தனது சொந்த மக்களையே கொன்று குவித்து, போராட்டத்தையே நாசம் செய்ய முயன்று கொண்டிருக்கின்றன.

மக்களின் விடுதலைக்கென்று புறப்பட்டு, தடம்மாறி, கொள்கையை விற்று,ஆக்கிரமிப்பாளர்களின் கூலிப் பட்டாளமாகமாறி, தமது சொந்தமக்களுக்கு-தாம் பிறந்து வாழ்ந்த சொந்த நாட்டிற்கே - துரோகம் புரிந்து கொண்டிருக்கும் இத்தமிழ்க் குழுக்கள் ஒன்றை உணரவேண்டும்.

அதாவது, புலிகள்தான் தமிழீழ மக்களின் போராட்ட சக்தி; தமிழ்மக்களின் தேசியபலமே புலிகள் இயக்கம்தான். தமிழர்களின் தேசியபலத்தை அழித்தொழிக்க சிங்கள அரசு கங்கணங்கட்டி நிற்கின்றது. புலிகளை அழிப்பதன்மூலம் தமிழ்மக்களின் தேசியபலம் சிதைக்கப்பட்டு போராட்டம் நசுக்கப்படும் - அப்படி நடந்தால், இத்தமிழ்க் குழுக்களின் தேவை சிங்கள அரசுக்கு இருக்கப்போவதில்லை.

அந்தநிலையில் மக்களாலும் வெறுக்கப்பட்டு, எஜமானர்களாலும் விரட்டப்பட்டு, விலக்கப்பட்ட மனிதர்களாக வாழ்ந்து இக்குழுவினர் அழியப்போகின்றார்கள்.

இந்த உண்மையை இந்தத் தமிழ்க் குழுக்கள் உணர்வதாகத் தெரியவில்லை. ❋

# புலிகளும் - தடைச்சட்டங்களும்

கடந்த மே மாதம் 14 ஆம் திகதி, புலிகள் இயக்கத்திற்கு எதிராக தடைச்சட்டமொன்றை இந்திய அரசு கொண்டுவந்து நிறைவேற்றியது, எல்லோரும் அறிந்ததே.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், இதேபோன்று முன்னரும் இருதடவைகள் புலிகள் இயக்கத்தின்மீது தடைச்சட்டங்கள் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன. அவையிரண்டும் சிறீலங்கா அரசினால் நிறைவேற்றப்பட்டிருந்தன.

1978 ஆம் ஆண்டு முதற்றடவையாகவும், 1987 ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாகவும் புலிகள் இயக்கத்தின்மீது தடைச்சட்டங்கள் பிரகடனப்படுத்தப்பட்டன.

இப்போது வெளிநாட்டு விடுதலை இயக்கமென்று, இந்திய அரசு (புலிகள் இயக்கத்தின்மீது) தடைச்சட்டத்தைப் பிரயோகித்திருக்கின்றது.

இத்தடைச்சட்டங்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் பயமும் ஆத்திரமும்தான்.

விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்படவேண்டும்; அதன்மூலம் விடுதலைப்போராட்டம் ஒடுக்கப்படவேண்டும் என்பதுதான், இத்தடைச்சட்டங்களின் அரசியல் நோக்கம்.

ஆனால், இவற்றுள் எதுவுமே யதார்த்த நிலைகளைப் புரிந்துகொண்டு அரசியல் விவேகத்துடன் எடுக்கப்பட்ட முடிவுகளாக இருக்கவில்லை. வெறுமனே இராணுவக் கண்ணோட்டத்துடனேயே இத்தடைகள் போடப்பட்டுள்ளன.

அதேசமயம் இந்தத் தடை நடவடிக்கைகள் எமது விடுதலைப் போராட்டத்திற்கு எந்தவிதப் பின்னடைவுகளையும் ஏற்படுத்தவில்லை. மாறாக, இத்தடைச்சட்டங்களை அலட்சியம்செய்தபடி போராட்டம் கிடுகிடுவென வளர்ந்துகொண்டே வந்திருக்கின்றது.

தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப காலகட்டங்களில், எமது இயக்கத்தை மக்கள் மத்தியில் நிலைநிறுத்துவதற்குத் தடையாகவிருந்த துரோகிகளையும், சிங்கள அரசின் இரகசியப் பொலிஸ் படையினரையும், அவர்களுக்குத் தகவல்களை வழங்கிய கோடரிக் காம்புகளையும் அழித்துவந்தோம். அம்முயற்சியில் நாம் வெற்றியடைந்ததோடல்லாமல், தேசாபிமான உணர்வுகொண்ட தீவிரவாத இளைஞர்களை ஆயுதப்போராட்டத்தின்பால் நம்பிக்கைகொள்ள வைத்தோம்; அவர்களையும் ஆயுதப் போரில் குதிக்கச்செய்தோம்.

இதன்காரணமாக, அகிம்சை அரசியலில் இருந்த தமிழர் தேசிய இனப்பிரச்சினை ஆயுத அரசியலாக மாற்றமடையத் தொடங்கியது.

இந்த அரசியற் பிரளயத்தை ஏற்படுத்தியது புலிகள் இயக்கம்தான்.

இந்தப் புரட்சிகர மாற்றம் வளர்ந்துசெல்லுமாயின் தமிழர்கள் தனியரசொன்றை எதிர்காலத்தில் அமைத்துவிடுவார்கள் என்ற பயத்தின் காரணமாக, அவ்வளர்ச்சியைத் தடுக்கவேண்டி, முதன் முதலில் சிங்கள அரசு புலிகள் இயக்கத்தைத் தடைசெய்தது.

1978 ஆம் ஆண்டு மே மாதம் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் இப் புலிகள் தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து புலிகள் இயக்கத்தை அழிக்கவென பிரிகேடியர் வீரதுங்காவின் தலைமையில், சிங்கள இராணுவம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டது.

அது புலிகளைப் பிடிக்கமுடியாது பொதுமக்கள்மீது அட்டூழியம் புரிந்ததும், சிங்கள அரசு எதிர்பார்த்ததற்கு மாறாக ஆயுதப் போராட்டம் வளர்ந்ததும் வரலாறு.

அதன்பின்னர் 1987 ஆம் ஆண்டு யூலை 29 இந்திய - சிறீலங்கா உடன்படிக்கையின்படி, புலிகளுக்குப் பொது மன்னிப்பு என சிங்கள அரசு அறிவித்துவிட்டு, கடலில் சென்ற எமது தளபதிகள் உட்பட 12 போராளிகளைக் கைதுசெய்து கொழும்பு கொண்டுசென்று விசாரிக்க முற்பட்டபோது, அவர்கள் சயனைட் அருந்தி உயிர் துறந்ததும், அவர்களது மரணத்தைத் தொடர்ந்து தென்தமிழீழத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைச் சாட்டாகவைத்து மீண்டும் புலிகள் இயக்கத்தைச் சிங்கள அரசு தடைசெய்ததும் தெரிந்ததே.

இந்தத்தடையானது புலிகள் இயக்கத்திற்கு எதிரானது என்பதை விட, இந்திய ராஜதந்திரத்தைத் தோற்கடிக்க சிங்கள அரசு பயன்படுத்திய ஒரு துரும்புச் சீட்டு எனலாம்.

அதாவது, இந்தியாவைப் புலிகள்மீது போர்ப்பிரகடனம் செய்யும்படி தூண்டுவதே இத்தடைச் சட்டத்தின் நோக்கம்.

குள்ளநரித் தந்திரோபாயமுள்ள சிங்கள அரசின் சாணக்கியதந்திற்கு இந்திய ராஜதந்திரம் பலியாகியது.

இந்திய - புலிகள் போர் தொடங்கியது.

இந்தப்போரில் புலிகள் வெற்றிபெற்றதும், இந்தியப் படைகள் அவமானகரமாக தமிழீழத்தை விட்டு வெளியேறியதும் தெரிந்ததே.

இந்த இராணுவ -ராஜதந்திரப் படுதோல்விகளால் கிடைத்த அவமானத்தை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் கொதித்துக்கொண்டிருந்த இந்திய ஆளும்வர்க்கம், புலிகளைப் பழிவாங்கச் சரியான தருணத்தை எதிர்பார்த்துக் கிடந்தது.

ராஜீவ் காந்தியின் கொலையைச் சாட்டாக வைத்து புலிகள் இயக்கத்திற்கு மாசு கற்பிக்கும் வகையில் அவப்பிரச்சாரங்களில் ஈடுபட்டது.

ஆனால், இந்தியா எதிர்பார்த்ததுபோல சர்வதேசத்தில் புலிகள் இயக்கத்திற்கு இருந்த அந்தஸ்தும் - மதிப்பும் குறையவில்லை: புலிகள் இயக்கம் தனிமைப்படவும் இல்லை.

இந்தியாவின் பழிவாங்கும் உணர்வை சர்வதேசம் புரிந்துகொண்டிருந்தது. இதனால் புலிகளுக்கெதிரான அவப்பிரச்சாரங்கள் பிசுபிசுத்துப்போயின.

அத்துடன் புலிகள் இயக்கமும் சிறீலங்கா அரசும் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இந்திய மத்தியஸ்துவத்தைக் கோராதுவிட்டதனால், சில நடுநிலை நாடுகள் மத்தியஸ்தத்திற்கு சம்மதம் தெரிவித்து எமது இனப்பிரச்சினையில் ஈடுபாடுகாட்டத் தொடங்கின.

இது இந்திய ஆளும்வர்க்கத்திற்கு உள்ளூர ஆத்திரத்தையும், பொறாமையையும் உருவாக்கியது.

இலங்கைத் தீவின் இனப்பிரச்சினையில் இந்தியாவைப் புறந்தள்ளிவிட்டு வேறு நாடுகள் தலையிடுவதை, உண்மையில் இந்தியா விரும்பவில்லை: ஆனாலும் அதை வெளிப்படையாகக் கூற முடியாதிருந்தது.

இந்தநிலையில்தான் புலிகள் இயக்கத்தின்மீது தடைச்சட்டம் ஒன்றைக் கொண்டுவந்து, வேற்று நாடுகளின் ராஜதந்திரத் தலையீடுகளைத் தடுக்க இந்தியா விரும்பியது. அதேசமயம் சிறீலங்கா அரசையும்-புலிகளையும் தொடர்ந்தும் போரிடவைத்து, புலிகளைப் பலவீனப்படுத்தி, ஈற்றில் அழித்துவிடலாம் என்ற கற்பனையிலேயே இந்திய அரசு தடைச்சட்டத்தைப் பிரயோகித்தது.

ஆனால் இத்தடை அறிவிப்பிற்கு சர்வதேசம் பெருமளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை; அத்துடன் சிறீலங்கா அரசும் இந்தியாவின் தடை அறிவிப்பைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

இந்தியாவின் தேசிய நலனுக்காக -குறுகிய அபிலாசைகளுக்காக- எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையை ஏற்று சிறீலங்காவின் தேசிய நலனை இழக்க, சிங்கள அரசும் தயாராக இருக்கவில்லை.

இந்த நிலையில் மீண்டும் இந்திய அரசு ஒரு ராஜதந்திரத் தோல்வியைச் சந்திக்கத் தயாராகி வருகின்றது.

ஒட்டுமொத்தமாக, எமது இயக்கத்தின்மீது - ஒவ்வொரு காலகட்டத்திலும் - விதிக்கப்பட்ட இந்தத் தடையை எடுத்துப்பார்த்தால், ஒவ்வொரு தடையும் அரசியல் - இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த திருப்புமுனைக் காலகட்டங்களில்தான் எடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்திய அரசின் இப்போதைய தடை அறிவிப்பும்கூட அப்படியான ஒரு நிலையிலேயே எடுக்கப்பட்டுள்ளது. சர்வதேசரீதியில் புலிகளுக்கு ஆதரவும் அங்கீகாரமும் பெருகிவரும் இவ்வேளையில்-சிங்கள அரசு பெரும் இழப்புக்கள், பொருட் செலவுகள் காரணமாகப் போரைத் தொடர்ந்து நடாத்த முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில்-புலிகளுக்கு எதிரான சக்திகளுக்கு ஒரு தார்மீக பலத்தைக் கொடுத்து, சர்வதேசநாடுகளுக்கு சங்கடத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தி புலிகள் இயக்கத்தைக் கீழே தள்ளிவிடும் நோக்கில்தான், இத்தடைச் சட்டம் அறிவிக்கப்பட்டது.

உண்மையில் இந்தியாவும் இத்தடைச்சட்டத்தை ஏகமனதாக அங்கீகரிக்கவில்லை.இந்திய அரசிற்குள் சில முக்கிய பகுதியினர்களிடையே, இந்தத் தடைச்சட்டம் தொடர்பாக முரண்பாடான கருத்துக்கள் நிலவிவந்தன.

பாதுகாப்பு அமைச்சும், இந்திய உளவு நிறுவனமான 'றோ' வும், மற்றும் டெல்லியிலுள்ள முக்கிய அரசியல் தலைவர்களும் இத்தடைச் சட்டத்தை விரும்பவில்லை.

இத்தடைச்சட்டம் இந்தியாவிற்கே பாதகமான விளைவுகளை உண்டுபண்ணும் என அவர்கள் வாதிட்டனர். அயல் நாடான இலங்கைத்தீவின்மீது அரசியல்-ராஜதந்திரரீதியாகத் தலையிடும் உரிமையை இந்தியா இழக்கவேண்டிவரும்; நேசசக்தியான தமிழீழத் தேசிய இனத்தை நிரந்தரமாகப் பகைக்கவேண்டிவரும்; எதிர்காலத்தில் புலிகளுடன் நட்புறவை வளர்க்க இது தடையாக இருக்கும் என்றெல்லாம்,இப்பிரிவினர் வாதிட்டனர்.

ஆனால் உள்துறை அமைச்சும், உள்ளூர் புலனாய்வுப் பிரிவினரான ஐ.பி.யும்,ஜெயலலிதாவின் தமிழ்நாடு அரசும்,புலிகளைத் தடைசெய்யவேண்டும் என விடாது அடம்பிடித்தன. இதனால்,

பாதுகாப்பு அமைச்சுக்கும் - உள்துறை அமைச்சுக்கும்,
றோவுக்கும் - ஐ.பி.க்கும்,
டெல்லிக்கும் - சென்னைக்கும்
இடையே கருத்துபேதங்கள் நிலவின.

ஆனால்,இறுதியில் காங்கிரஸ் கட்சியின் அழுத்தம் காரணமாகவும் காங்கிரஸ் கட்சியிலுள்ள சக்தி வாய்ந்த ராஜீவின் ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்தவேண்டியுமே,இந்திய அரசு இத்தடைச்சட்டத்தைப் பிரகடனப்படுத்தியது.

ஆனால் என்னதான் செய்தாலும் புலிகளை அழிக்கமுடியாது: தமிழீழ மக்களிடமிருந்து அவர்களை அந்நியப்படுத்தமுடியாதென்பது, எல்லாப்பகுதியினருக்கும் நன்கு தெரியும்.

எது எப்படி இருந்தாலும் மற்றைய தடைச்சட்டங்களைப் போலவே இச்சட்டமும் இறுதியில் பிசுபிசுத்துவிடும் என்பதுடன்,இவை எல்லாவற்றையும் இடித்துப் புறந்தள்ளியபடி எமது போராட்டச் சக்கரம் வளர்ச்சியை நோக்கி நகர்ந்தபடியே இருக்கும். ❋

---

**ஏப்ரில் - 15 முதல் யூன் 15 வரை**

## 281 சிங்களப் படையினர் பலி.

### 146 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

### 158 புலி வீரர்கள் வீரச்சாவு-

15-4-1992ஆம் திகதியிலிருந்து, 15-6-1992ஆம் திகதி வரையான 61 நாட்களிலும் தமிழீழத்தின் பல்வேறு முனைகளிலும் சிங்களப்படையினர் மீது, புலிவீரர்கள் தொடர்ச்சியாக பல அதிரடித்தாக்குதல்களை நடாத்தியிருப்பதுடன் சிங்களப்படையினரின் நான்கு பெரிய இராணுவ நடவடிக்கைகளையும் எதிர்கொண்டிருக்கின்றார்கள்.

இந்தச் சண்டைகளின் போது 281 படையினர் கொல்லப்பட்டதுடன், அவர்களிடமிருந்து 146 ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. 158 புலி வீரர்கள் வீரச்சாவை அணைத்துக்கொண்டார்கள்.

இக்காலப்பகுதிக்குள் சிங்களப் படையினர் மேற்கொண்ட நான்கு பெரிய இராணுவ நடவடிக்கைகள் அவர்களுக்கு வெற்றியைக் கொடுக்கவில்லை.

☆ 'பச்சைப் பட்டி-3' என்ற பெயரில் மன்னாரில் துவக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை, புலிவீரர்களின் பலத்த எதிர்ப்பின் காரணமாக நிறுத்தப்பட்டது.

☆ பலாலி வான்படைத் தளத்திலிருந்து இரண்டு இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அச்சுவேலி - தொண்டமனாறுப் பகுதியூடாக நடாத்தப்பட்ட "சண்டமாருதம்-1" நடவடிக்கையில் சிங்களப்படையினர் திரும்பவும் முகாமிற்குள் அடித்து விரட்டப்பட்டனர். தெல்லிப்பளை - கீரிமலைப் பகுதியூடாக நடாத்தப்பட்ட 'சண்ட மாருதம்-2' நடவடிக்கையின் போது முன்னேறிய படையினர், புலிகளின் உக்கிர எதிர்த்தாக்குதல் காரணமாக தெல்லிப்பளையில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

☆ வன்னியில் - முல்லைத்தீவு படைத் தளத்திலிருந்து மணலாறு நோக்கி நடாத்தப்பட்ட "ஏழு சக்திகள்" நடவடிக்கையின் போது -குமுழமுனை வரை முன்னேறிவந்த சிங்களப்படையினர் - புலிகள் தொடுத்த உக்கிர எதிர்த் தாக்குதலின் காரணமாக, அலம்பில் சந்திவரை திரும்பவும் அடித்து விரட்டப்பட்டனர்.

# தமிழீழ விடுதலைப் போராட்டமும்

தமிழ்பேசும் மக்கள் என்ற வகையில் தமிழர்களைப்போன்றே முஸ்லிம்களும் அரசியல்-பொருளாதார-சமூக ரீதியில் சிங்களப் பேரினவாதத்தால் அடக்கப்படுகின்றனர்.

இவ் அடக்குமுறையிலிருந்து விடுதலை அடைவதற்காக தமிழ்பேசும் மக்கள் தங்கள் தாயக பூமியில் ஒரு தனியரசை அமைக்க ஆயுதப் போராட்டத்தை நடாத்தி வருகின்றனர்.

## சிங்களப் பேரினவாதத்தின் சூழ்ச்சி

இப்போராட்டத்தில் முஸ்லிம் மக்களை இணையவிடாது தடுப்பதில் சிங்களப் பேரினவாதம் பல சூழ்ச்சிகளையும், சதிகளையும் செய்துவருகின்றது.

இவ்வித சதி அரசியலில் ஈடுபடுவதற்குப் பிரதான காரணம் ஒன்றுண்டு.

அதாவது, தமிழ்-முஸ்லிம் மக்களின் இணைவு போராட்டத்திற்கு அதிக வலிமை சேர்க்கும் என்பதுடன், உலக முஸ்லிம் நாடுகளின் ஆதரவையும் உதவியையும் போராட்டம் பெறுவதானது அதன் வெற்றியை உறுதிப்படுத்திவிடும். இவை சிங்களப் பேரினவாதத்தின் நோக்கங்களுக்குக் குந்தகமாக அமையும்.

ஆகவேதான், முஸ்லிம்களை இப்போராட்டத்திலிருந்து பிரித்து வைக்கச் சிங்களப் பேரினவாதம் காலங்காலமாகப் பல சூழ்ச்சிகளைச் செய்துவருகின்றது.

சிங்களப்பேரினவாதத்தைப் பொறுத்தவரை தென்தமிழீழத்தை அதாவது கிழக்குமாகாணத்தைத் தமிழர்களிடமிருந்து அபகரித்து அதைச் சிங்களமயமாக்குவதுதான், அதன் பிரதான இனவாதத்திட்டமாகும்.

கிழக்குமாகாணத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்துநின்றால், சிங்களப் பேரினவாதத்தின் எண்ணம் ஈடேறமாட்டாது.

எனவே முஸ்லிம்களை தமிழர்களிடமிருந்து பிரித்துத் தன்னுடன் இணைத்து, தமிழர்களுக்கெதிராகப் போர்புரியச் சூழ்ச்சிகள் செய்தது.

தனது சூழ்ச்சி வலைக்குள் முதலில், கொழும்பில் நலன்களைக் கொண்டிருந்த முஸ்லிம் தலைவர்களையும்-முஸ்லிம் மதபீடத்தையும் வீழ்த்தி, அதன்மூலம் முஸ்லிம் மக்களையும் தனது சதிவலைக்குள் சிக்கவைக்க முயன்றது.

இச்சூழ்ச்சிகளையும் சதிகளையும் நாம் முன்னரே நன்கு அறிந்திருந்தோம். இதனால், இச்சூழ்ச்சிகர அரசியலைப்பற்றி தமிழ் மக்களுக்கு விளங்கவைத்ததுடன் முஸ்லிம்களையும் சதிக்குள் வீழாது தடுக்க அரும்பாடுபட்டோம்.

ஆனாலும், சிங்களப் பேரினவாதத்தின் சூழ்ச்சி வலைக்குள் முஸ்லிம்கள் கண்ணை மூடிக்கொண்டு வீழ்ந்துவிட்டனர்.

## இந்திய அரசின் சூழ்ச்சி

1987ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நேரடியாகத் தலையிட்ட இந்திய அரசும், முஸ்லிம் - தமிழ் முரண்பாட்டை மேலும் வளர்த்துவிடும் முயற்சிகளில் ஈடுபட்டது.

சிங்களப் பேரினவாதம் கருதியதைப்போன்றே, தமிழ் முஸ்லிம் மக்களின் இணைவு தனது தேசிய-பிராந்திய நலன்களுக்குக் குந்தகமாக அமையும் என, இந்திய ஏகாதிபத்தியமும் கருதியது. தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டம் வலுவடைவதை அது விரும்பாது. ஏனெனில் இப் போராட்டம் அதன் தேசிய-பிராந்திய நலன்களுக்கு முரணானது என, இந்திய ஏகாதிபத்தியம் கருதுகின்றது. எனவே, சிங்களப் பேரினவாதம் முஸ்லிம் மக்கள் மத்தியில் வளர்த்த தமிழ் விரோதப்போக்கை மேலும் தீவிரமாக்க, அது நடவடிக்கை எடுத்தது. தமிழர் விரோத சக்திகளான முஸ்லிம் காங்கிரசிற்கும் ஜிகாத் அமைப்பிற்கும் ஆயுதங்களை வழங்கி, தமிழ் மக்களுக்கும் போராட்டத்திற்கும் எதிராக முஸ்லிம்களை ஆயுதமயமாக்கியது.

அதேசமயம் தன்னுடன் ஒட்டிக்கொண்டிருந்த தமிழ் துரோகக்கும்பல்களை முஸ்லிம் மக்கள்மீது ஏவிவிட்டுத் தன்னை ஒரு நடுநிலைவாதியாகவும், சமாதான விரும்பியாகவும் காட்டிக்கொண்டது.



மட்டக்களப்பு: முஸ்லிம்களால் படுகொலை

> சிங்களப் பேரினவாதத்தைப் பொறுத்தவரை தென் தமிழீழத்தை அதாவது கிழக்கு மாகாணத்தைத் தமிழர்களிடமிருந்து அபகரித்து அதைச் சிங்களமயமாக்குவதுதான், அதன் பிரதான இனவாதத்திட்டமாகும்.
>
> கிழக்குமாகாணத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்துநின்றால், சிங்களப் பேரினவாதத்தின் எண்ணம் ஈடேறமாட்டாது.
>
> எனவே முஸ்லிம்களை தமிழர்களிடமிருந்து பிரித்துத் தன்னுடன் இணைத்து, தமிழர்களுக்கெதிராகப் போர்புரியச் சூழ்ச்சிகள் செய்தது.

## சதி வலைக்குள் சிக்கிய முஸ்லிம்கள்

இந்தச் சூழ்ச்சிகர அரசியலைப் புரிந்துகொள்ளாத முஸ்லிம்கள், தமிழர்களைத் தமது எதிரிகளாகக் கருதத்தொடங்கினர்.

ஆனாலும், புலிகளாகிய நாம் இந்த நெருக்கடிநிலையை அவதானமாகவும் பொறுமையாகவும் கையாண்டோம்.

இந்திய இராணுவம் வெளியேற்றப்பட்ட பின்னர் சிங்கள-இந்திய அரசுகளின் சதிவலைக்குள் சிக்குண்ட முஸ்லிம் மக்களை மீட்டெடுக்க, எமது இயக்கம் அரும்பாடுபட்டது; எமது அரசியல் வேலைகளில் பெரும்பங்கை நாம் இதற்காகவே செலவிட்டோம்.

ஆனால், சிங்களப் பேரினவாதத்தின் கைக்கூலிகளாக இருந்த முஸ்லிம் அரசியல்-மதத் தலைமைகள், முஸ்லிம் மக்கள் மத்தியில் தமிழ் மக்களையும் போராட்டத்தையும் எதிரியாகக் காட்டியபடி வெறிப் பிரச்சாரங்களில் ஈடுபட்டன.

இந்தநிலை படிப்படியாக வளர்ந்து, சிங்களப் படைகளுடன் போர்தொடங்கிய 1990யூன் 10ஆம் திகதிக்குப் பின்னர், ஆயுதம்தாங்கிய முஸ்லிம் காடையர்களும்- ஊர்காவற்படையினரும் தமிழர்களை இனப்படுகொலை செய்யத் தொடங்கினர்.

சிங்களப் பேரினவாதத்தினதும்- இந்திய ஏகாதிபத்தியத்தினதும் சூழ்ச்சிகளுக்கு முஸ்லிம் மக்கள் முழுமையாகவே பலியாகிவிட்டார்கள்.

## எமகாதகர்கள் பாத்திரத்தில் முஸ்லிம்கள்

இதனால், இன்று தென்தமிழீழம் கொலைக்களமாக மாறிவிட்டது. இதுவரைகாலமும் ஆக்கிரமிப்பாளர்களான சிங்கள ஆயுதப்படைகளும் சிங்களக் குடியேற்றவாசிகளும், ஆங்காங்கே எமகாதகர்கள் பாத்திரத்தை வகித்துவந்தனர். இப்பொழுது, தமிழர்களுடன் காலங்காலமாகக் கூடிவாழ்ந்த முஸ்லிம்களும் அப்பாத்திரத்தை அங்கு பங்குபிரித்துவிட்டனர். ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிக்குள் வாழும் மக்கள்மீது எதிரி இராணுவம் என்னசெய்யுமோ அதையெல்லாம், முஸ்லிம் வெறியர்களும் - முஸ்லிம் ஊர்காவற் படையினரும்தமிழ் மக்கள் மீது காட்டிக்கொண்டிருக்கின்றனர்.

படுகொலை, பாலியல்வன்முறை, கொள்ளை, தீயிட்டழித்தல், கலாசாரச் சின்னங்களை அழித்தல், பொருளாதார நிலையைச் சிதைத்தல் என்று சிங்களப் பேரினவாத அரசு தமிழீழ மக்களுக்கு எதிராகச் செய்துவரும் இன அழிப்பு வடிவங்களை, சிங்கள ஆயுதப்படையினருடன் சேர்ந்து முழு அளவில், முஸ்லிம் வெறியர்களும் தமிழீழ மக்கள்மீது புரியத் தொடங்கிவிட்டனர்.

தென்தமிழீழத்தைப் பொறுத்தவரை இன்று, சிங்கள ஆயுதப்படைகளுக்கு அஞ்சுவதைவிட முஸ்லிம் வெறியர்களுக்கே தமிழீழ மக்கள் பெரிதும் அஞ்சுகின்றனர்.

தமிழ்ப் பெண்கள்மீது பாலியல் வன்முறைகளில் சிங்கள ஆயுதப் படையினர் ஈடுபடுவதைவிட அதிகளவிலும், கொடூரமான முறைகளிலும் முஸ்லிம் வெறியர்களே ஈடுபடுகின்றனர் என்ற துக்ககரமான-வெறுக்கத்தக்க-உண்மையை, நாம் ஒப்புக்கொள்கின்றோம்.

அத்துடன் தமிழர் கிராமங்களுக்குள் புகுந்து பெருமளவில் படுகொலைகளைச்செய்து, கிராமங்களைத் தீயிட்டழித்து, தமிழர் நிலங்களை, வீடுகளை சொத்துகளைக் கைப்பற்றி, ஒரு எதிரிப் படைகளைப்போல தென்தமிழீழ முஸ்லிம் காடையர்கள் செயற்பட்டுவருவதை யாரும் மறுக்க முடியாது.

## முஸ்லிம்களால் படுகொலைகள்

தென்தமிழீழ மக்கள் இன்று. ஒரே தடவையில் இருமுனைகளிலிருந்து எதிரிப் படைகளைச்சந்திக்கின்றனர்.

ஒருபக்கம் சிங்கள ஆயுதப்படையினரையும்-சிங்களக் குடியேற்றவாசிகளையும்; மறுமுனையில், ஆயுதந்தாங்கிய முஸ்லிம் காடையர்கள் -முஸ்லிம் ஊர்காவற்படையினரையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

1990ஆம் ஆண்டு யூன் மாதம் சிங்கள ஆயுதப்படையினருடன் மூண்ட இரண்டாம் கட்டப் போரைத்தொடர்ந்து இன்றுவரை, கொடூரம்மிக்க - மனிதாபிமான மற்ற-ஒரு எதிரி இராணுவத்தைப் போன்றே பெரும்பாலான தென் தமிழீழ முஸ்லிம்கள் செயற்பட்டு வருகின்றனர்.

இந்த இரண்டு வருடப் போரிலும் கொல்லப்பட்ட சுமார் 10,000 தமிழர்களில் அரைப்பங்கினர் முஸ்லிம் வெறியர்களினாலேயே கொல்லப்பட்டுள்ளனர்.

அதுவும் தென்தமிழீழத்தின் அம்பாறை மாவட்டத்தில் கொல்லப்பட்ட தமிழர்களில் முக்காற் பங்கினர் ( 3/4 ), முஸ்லிம் வெறியர்களினாலேயே கொல்லப்பட்டுள்ளனர் என்ற கசப்பான உண்மை, வரலாற்றில் மறைக்கப்பட முடியாதது. அம்பாறை மாவட்டத்தில் 6,000 பேருக்குமேல் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 5,000 பேர் முஸ்லிம் வெறியர்களினாலேயே கொல்லப்பட்டனர். (கணக்கு விபரம் சரியாகத் தெரியவில்லை. சில வேளை இதைவிட அச்சமூட்டும் வகையில், கொல்லப்பட்டவர்களின் தொகை அதிகமாக இருக்கலாம். காணாமல் போனவர்களும் பலர்.)

இம்மாவட்டத்தின் பழந்தமிழ்க் கிராமங்கள் பல முஸ்லிம் வெறியர்களினால் அடியோடு அழிக்கப்பட்டுவிட்டன. இன்று அவை முஸ்லிம்களினால் ஆக்கிரமிக்கப்பட்ட கிராமங்களாக மாறிவருகின்றன.

நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர் கிராமங்களைக் கொண்டிருந்த அம்பாறை மாவட்டத்தில் இன்று ஐந்து இடத்தில் மட்டும்தான் தமிழர்கள் வாழ்கின்றார்கள்.

1. பாண்டிருப்பு, 2. காரைதீவு. 3. கோமாரி. 4. தம்பிலுவில், 5. திருக்கோவில்.

இவைகூட அகதிமுகாம்களாகவே இருக்கின்றன. இதில் கேவலம் என்னவென்றால் இவ் அகதிமுகாம்கள் முஸ்லிம் வெறியர்களினால் தாக்கப்படாமலிருக்க, சிங்கள இராணுவம் அகதிமுகாம்களுக்குப் "பாதுகாப்பு" அளிப்பதுதான்!

வெறிபிடித்த ஓநாய்களிடமிருந்து ஆடுகளைப் பாதுகாக்க சிங்கம் காவலிருக்கின்றது. இது வேடிக்கையாக இருந்தாலுங்கூட இதுதான் அங்கு உண்மை நிலை.

# தமிழீழ முஸ்லிம்களும்

## ஏன் இந்தத் துயரம் நிகழ்ந்தது?

காலங்காலமாகத் தமிழர்களுடன் கூடிவாழ்ந்த முஸ்லிம்கள், ஏன் திடீரென தமிழர்களின் எதிரிகளாக மாறினார்கள்?

ஏன் இந்த மிலேச்சத்தனமான பாலியல் வன்முறைகளிலும், காட்டுமிராண்டித்தனமான 'படுகொலைகளிலும் முஸ்லிம்கள் ஈடுபடுகின்றார்கள்?

தமிழர்கள் முஸ்லிம் மக்களைச் சிங்கள ஆயுதப்படையினருக்குக் காட்டிக் கொடுத்தார்களா? அல்லது முஸ்லிம் பெண்களைப் பாலியல் வன்முறைக்குட்படுத்திப் படுகொலை செய்தார்களா?

அல்லது முஸ்லிம்களின் நிலங்களைப் பறித்து, அவர்களின் கலாசாரச் சின்னங்களைத் துடைத்தெறிந்து,தனித்துவத்தைச் சிதைக்க முயன்றது தமிழர்களா? அல்லது தமிழ்மக்களின் தேசிய இயக்கமாகிய/ புலிகள் இயக்கம் அரசியல் ரீதியாக முஸ்லிம் மக்களுக்குத் தவறிழைத்து விட்டதா? அல்லது முஸ்லிம் எதிர்ப்பு உணர்வைக் காட்டி முஸ்லிம்களை இம்சித்ததா? எதுவுமேயில்லை.

அப்படியாயின் தமிழர்களைப் பொது எதிரியைப்போன்று கருதி, உண்மையில் பொது எதிரியான சிங்களப் பேரினவாத சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து, முஸ்லிம் மக்கள் தமிழர்களை ஏன் அழிக்கின்றார்கள் ?

இதில் துயரம் என்னவென்றால், முஸ்லிம் மக்களில் பெரும்பாலானோர் தமிழர்களை எதிரிகளாகக் கணித்து வன்முறைகளில் ஈடுபடுவதுதான்.

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே காலத்திற்குக்காலம் பொருளாதாரக் காரணிகளாலும்,குழல்பிட்டு போன்ற வாழிடம் காரணமாகவும் இடையிடையே சிறியளவில் முரண்பாடுகள் தலைதூக்குவதும் அது சிலசமயங்களில் கைகலப்புகள், குழுச்சண்டைகளாக மாறுவதும், பின்னர் சமரசத்திற்குவந்து அமைதி திரும்புவதும் பழைய வரலாறு.

1983 ஆம் ஆண்டு இலங்கைத்தீவில் சிங்களப் பேரினவாத சக்திகள் தமிழ் மக்களுக்கெதிராக ஒரு படுகொலையை ஏவிவிட்டதும், அதன் எதிர் விளைவாக பெருமளவில் தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போரில் இணைந்துகொண்டதும், அதனால் சிங்கள - தமிழ் தேசிய இன முரண்பாடுகள் மேலும் கூர்மையடைந்ததும் எல்லோரும் அறிந்ததே.

சிங்களக் குடியேற்றவாசிகள் காட்டுமிராண்டித்தனமாக தமிழர்களைத் தாக்கி அழிக்கத் தொடங்கினர்.

இக்காலப்பகுதியில் தமிழர்களுக்கெதிராக சிங்கள ஆயுதப்படை பகிரங்கமாக ஏவிவிடப்பட்டது. இந்த யதார்த்த நிகழ்வுகளுக்குப் பின்னர், தமிழ் - முஸ்லிம் மக்களிடையே சிறியளவில் முரண்பாடுகள் ஏற்படும்போதும் அம்முரண்பாடுகள் பெரியளவில் மோதலாகவும் வெடிக்கத் தொடங்கியது' முன்னரைப்போலல்லாது குறித்த இக்காலகட்டங்களில், முரண்பாடுகள் எழும்போது தமிழ்மக்களைத் தாக்க முஸ்லிம் மக்கள் முண்டியடித்தபடி திரண்டெழுந்தனர்.

இதற்குக் காரணம் தமக்குப் பக்கபலமாகவும் தமிழர்களுக்குப் பாதகமாகவும் சிங்கள ஆயுதப்படைகளும், சிங்களக் குடியேற்றவாசிகளும் இருப்பதை முஸ்லிம்கள் வெளிப்படையாகக் கண்டு உணர்ந்து கொண்டதுதான்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள காரைதீவு என்ற தமிழ்க் கிராமம் 1985 ஆம் ஆண்டு, அதைச் சூழவுள்ள முஸ்லிம் கிராமங்களால் தாக்கி எரியூட்டப்பட்டது. இதுதான் தமிழர்களுக்கு எதிராக முஸ்லிம்கள் புரிந்த முதலாவது பாரிய தாக்குதற் சம்பவமாகும்.

சிங்களக் காவற்துறையும், ஆயுதப்படைகளும் தமிழர்களுக்கெதிரான இந்த வன்முறைகளைக் கண்குளிர்ச்சியுடன் பார்த்துநின்றனர்.

இதைத் தொடர்ந்து மஞ்சந்தொடுவாய் என்ற தமிழ்க் கிராமத்தைக் காத்தான்குடி முஸ்லிம்கள் தாக்கியபோது. அவர்களுடன் கூட வந்த சிறீலங்காவின் விசேட அதிரடிப் படையினர், புலிகளைக் கூட்டி வந்து முஸ்லிம்களைக் கொல்லும்படி, பாதிக்கப்பட்டு ஓடிக்கொண்டிருந்த தமிழர்களுக்கு ஆலோசனை கூறினர்.

ஆனால் புலிகளாகிய நாம் சிங்களப் படையினரின் நயவஞ்சக நோக்கத்தைத் தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்தியதுடன், இம்மோதலை எமது மக்கள் மத்தியிலான ஒரு உள் முரண்பாடாகவே கருதி, கலவரத்தை நிறுத்தி அமைதியை ஏற்படுத்த அவதானமாகச் செயற்பட்டோம்.

## புலிகளாகிய எமது நிலைப்பாடு என்ன?

முஸ்லிம்களுக்கு எதிராகக் கலவரத்தில் பங்குகொண்ட தமிழர்களை நாம் கைதுசெய்தோம். (இவர்கள் அனைவரும் இக்கலவரத்தில் முஸ்லிம்களால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது).

உணர்ச்சிவசப்பட்ட நிலையில் முஸ்லிம்களை ஆயுதம்கொண்டு தாக்க எத்தனித்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ போன்ற அன்றைய ''விடுதலை இயக்கங்களை'' அவ்வாறு செய்யவிடாது தடுத்தோம்.

ஆனால், தமிழர்கள்மீது வன்முறை செய்த முஸ்லிம்களைத் தெரிந்திருந்தும் நாம் கைதுசெய்யவில்லை.

காரைதீவு தொடக்கிவைத்த கலவரம் ஏறாவூர், காத்தான்குடி, வாழைச்சேனை ஆகியபகுதிகளிலும் பரவி தமிழர்கள் தாக்கப்பட்டனர். தமிழர்களின் வீடுகள் தீயிடப்பட்டன. அங்கேயும் சிங்களப் படையினர் மகிழ்ச்சியுடன் பார்த்து இரசித்து, முஸ்லிம் காடையர்களை, ஊக்குவித்துக் கொண்டிருந்தனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரிய முஸ்லிம் கிராமங்களை அண்டியிருந்த சிறிய தமிழ்க் குடியிருப்புகள் தாக்கப்பட்டு எரியூட்டப்பட்டன. ஆனால்,பெரிய தமிழ்க் கிராமங்களுக்கு அருகில் இருந்த சிறிய முஸ்லிம் குடியிருப்புகள் தாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஏனெனில் அத்தகைய முஸ்லிம் கிராமங்களை எமது போராளிகள் பாதுகாத்தனர். ஆனால் பெரிய முஸ்லிம் கிராமங்களுக்கு அருகில் இருந்த தமிழர் கிராமங்களுக்கு, நாம் எந்தவித பாதுகாப்பு வசதிகளும் செய்யவில்லை.

1990ஆம் ஆண்டு யூன் மாதத்திற்கு முன்னர் தமிழ்-முஸ்லிம் மோதல்கள் இடம்பெற்றபோதெல்லாம்,புலிகளாகிய நாம் முஸ்லிம்களின் பக்கம் நின்றுதான் பிரச்சினைகளைப் பார்க்கவும்-தீர்க்கவும் முயன்றோம். அதன் காரணமாக தமிழ் மக்களின் கோபத்தையும் சம்பாதித்துக் கொண்டோம்.

தமிழர்களைத் தாக்கும் முஸ்லிம்களுக்கு ஆதரவாக புலிகள் இயக்கம் செயற்படுவதாகக் குற்றம் சுமத்தி காரைதீவு, மஞ்சந்தொடுவாய்த் தமிழர்கள் அக்காலகட்டத்தில் புலிகள் இயக்கத்திற்கெதிராக ஊர்வலம் போனார்கள்.

இக்கலவரம் முடிந்தபின் காத்தான்குடியில் முதன் முதலாக,ஆயுதம் தாங்கிய ஊர்காவற்படையை முஸ்லிம்கள் அமைத்தனர்.

இது தமிழ் மக்களுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய ஒரு முஸ்லிம் குழுவை அமைத்ததற்கு ஒப்பாகும். இவ் ஊர்காவற் படைகள் படிப்படியாக தென்தமிழீழத்திலுள்ள பெரும்பாலான முஸ்லிம் கிராமங்களில் அமைக்கப்பட்டு, முஸ்லிம்கள் ஆயுதமயமாக்கப்பட்டு, தமிழ் மக்களுக்கெதிரான ஆயுத வன்முறையில் முஸ்லிம்கள் படிப்படியாக ஈடுபடத்தொடங்கினர். இவர்களுக்கு உரிய ஆயுதங்களைச் சிங்கள அரசு கொடுத்துவந்தது.

எமது போராட்ட நடவடிக்கைகள் தென்தமிழீழத்தில் முடுக்கிவிடப்பட்ட போது (1984— 1985) காட்டிக்கொடுப்போரையும், கடும் குற்றம் புரிந்தவர்களையும், சமூக விரோதிகளையும் மரணதண்டனைக்குட்படுத்தினோம்.

ஆனால்,காட்டிக் கொடுப்போரா கவும், சமூக விரோதிகளாகவும், முஸ்லிம் இளைஞர்கள் இருக்கும் போது அவர்களுக்கெதிராக நாம் எந்த நடவடிக்கையும் எடுக்காது, அக்குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுக்கும் பொறுப்பை அவ்வப் பகுதி பள்ளிவாசல்களிடமே விட்டோம்;ஆனால் பள்ளிவாசல்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**தமிழர்களை அழிப்பதன் மூலம் தங்களது சுதந்திரம், தனித்துவம், இறைமை பாதுகாக்கப்படும் என முஸ்லிம்கள் கருதுகின்றார்கள் போல் தோன்றுகின்றது. அதன்மூலம்தான் முஸ்லிம் மக்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு கிடைக்குமென நம்புகின்றார்கள் போலும்.**

**இங்கே புலிகளாகிய நாங்கள் கூறவிரும்புவது என்னவென்றால், எதிரி யார் ? நண்பன் யார் ? என்பதை முஸ்லிம் சமூகம் இன்னும் கண்டறியவில்லை என்பதைத்தான்.**

**தமிழ்மக்கள் முஸ்லிம் மக்களின் விரோதிகளுமல்லர்; பகைவர்களுமல்லர்-**

**முஸ்லிம்களின் உண்மையான விரோதிகள் சிங்களப்பேரினவாதமும் இந்திய ஏகாதிபத்தியமுமேயாகும்.**

**இந்த உண்மையை உணர்ந்து, முஸ்லிம்கள் தமது தமிழர் விரோத உணர்வைக் கைவிடவேண்டும்; தமிழர்களுடன் ஒன்றிணைந்து வாழ்வதில்தான் முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலமே தங்கியுள்ளது.**

பல சந்தர்ப்பங்களில்-தென்தமிழீழத்தில்-எமது போராளிகள் முஸ்லிம் கிராமவாசிகளினால் பலவந்தமாகப் பிடிக்கப்பட்டு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் அல்லது காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளனர்.

யாரோ ஒருவரால் அல்லது ஒரு குடும்பத்தால் இரகசியமாக-ஒரு போராளி காட்டிக் கொடுக்கப்படுவது என்பது வேறு; கிராமமக்களே சேர்ந்து போராளியை இராணுவத்திடம் பிடித்துக்கொடுப்பதென்பது வேறு.

இரகசியமான காட்டிக்கொடுப்புகள் எங்கும்தான் நிகழ்கின்றன. அது ஒரு கோடரிக்காம்பின் வேலை. ஆனால் கிராமமக்கள் பலர் சேர்ந்து ஒரு போராளியைப் பிடித்து எதிரி இராணுவத்திடம் கொடுப்பதென்பது,அக்கிராமம் எதிரியா நண்பனா என்பதைப் பொறுத்திருக்கின்றது.

இவ்விதமாக போராட்டத்திற்கும் தமிழ் மக்களுக்குமெதிராக முஸ்லிம் கிராமங்கள் சில செயற்பட்டுவந்தபொழுதிலும் கூட, நாம் முஸ்லிம்கள் தொடர்பாக மென்போக்கைக் கடைப்பிடித்தும் அதிகளவு சலுகைகளையும், விட்டுக்கொடுப்புக்களையும் செய்தும்,முஸ்லிம் மக்களின் நம்பிக்கையைப் பெற்று அவர்களையும் போராட்டத்துடன் இணைத்துச் செல்ல அரும்பாடுபட்டோம்.

## இந்தியப் படையிடமிருந்து ஆயுத உதவிகள்

இந்த நிலையில் 1987 ஆம் ஆண்டு யூலை 29 ஆம் திகதி, இந்தியப் படைகள் தமிழீழத்தை ஆக்கிரமித்தன.

சிங்களப் பேரினவாத அரசுடன் ஒட்டிக்கொண்டிருந்ததைப் போல, முஸ்லிம் தலைமைகள் இந்திய இராணுவ பீடத்துடனும் ஒட்டிக்கொள்ளத் தொடங்கின. இந்திய அரசிடமிருந்து முஸ்லிம் காங்கிரஸ் ஆயுதங்களையும் பெற்றுக்கொண்டது.

இந்த ஆயுதங்கள் சிங்களப் படையுடன் போராட அல்ல. தமிழ் மக்களைப் போன்று இனரீதியாக ஒடுக்கப்பட்டிருந்த போதிலும்கூட, முஸ்லிம்கள் ஆயுதமேந்திச் சிங்கள அரசிற்கு எதிராகப் போராடியதாக வரலாறே இல்லை. அப்படியாயின் அவர்கள் யாருக்கு எதிராகப் போராட ஆயுதங்களைப் பெற்றார்கள்? சந்தேகமேயில்லை. தமிழர்களைக் கொன்றுகுவிக்கத்தான் சிங்களப்படையினரிடமிருந்தும், இந்திய அரசிடமிருந்தும் ஆயுதங்களைப் பெற்றார்கள்.

ஆனால், இந்தியப் படையினர் மத்தியிலிருந்த முஸ்லிம் விரோதப் போக்காலும், இந்திய இராணுவத்துடன் ஒட்டிக்கொண்டிருந்த தமிழ்த் துரோகக் கும்பல்களின் முஸ்லிம் விரோதப் போக்காலும், தமிழர்களுக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபடாது அடங்கியிருந்த முஸ்லிம் வெறியர்கள் இந்தியப் படையின் வெளியேற்றத்தின் பின்னர், மீண்டும் சிங்களப் படைகளுடன் கூட்டுச் சேர்ந்தனர்.

இந்திய இராணுவத்தை வெளியேற்ற சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில் ( 1989 - 1990 ), முஸ்லிம் மக்களைப் போராட்டத்தின்பால் வென்றெடுக்க, நாம் பகீரத முயற்சிகளைச் செய்தோம்.

போராட்டத்திற்குத் தேவையான நிதியை வரிமூலமும்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இரண்டு வருடப்போர்

**இந்திய ஆக்கிரமிப்புப் படைகளின் வெளியேற்றத்தின் பின்னர், 1990 ஆம் ஆண்டு யூன் 10 ஆம் திகதி மீண்டும் சிங்களப் படைகளுடன் தொடங்கிய போர் இரண்டு வருடங்களைப் பூர்த்திசெய்துவிட்டது.**

**இந்த இருவருடகாலப்பகுதியும் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கியமான - எடுத்துக்காட்டுகள் நிறைந்த- காலப்பகுதியாக மிளிர்கின்றது.**

**இந்த இடைவிடாத - கடுமையான - இருவருடப்போர் அரசியல், இராணுவரீதியாக எமது விடுதலைப் போராட்டத்திற்குப் பல வெற்றிகளை ஈட்டித் தந்துள்ளது.**

**அதேசமயம் எமது இயக்கத்திற்கும் பல அனுபவங்களையும் படிப்பினைகளையும் தந்துள்ளது. இந்தவகையில் இவ்விரு வருடங்களில் தமிழீழ விடுதலைப் போராட்டம் பிரமாண்டமான வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. இந்த இரண்டு வருட காலப்பகுதியை ஆய்வு செய்கிறது இக்கட்டுரை.**



1991 ஆம் ஆண்டின் முத்தமிழ் விழாவின்போது மக்களின் முன், தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் உரையாற்றிய வரலாற்று நிகழ்வு.

இதுவரைகாலமும் புலிகளை ஒரு '' யுத்த விரும்பிகள் '' என்றே சிங்களப் பேரினவாதம் உலகிற்குக் காட்டி வந்தது.

புலிகளின் பிடிவாதத்தால்தான் போர் தொடர்ந்து நடைபெறுகின்றது; சமாதான வழிமுறைகள் மூலம் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதை புலிகள் தடுக்கின்றார்கள்; இதனால் மக்கள் துன்பத்தைச் சுமக்கின்றார்கள்; சிறீலங்காவின் அபிவிருத்தி பாதிக்கப்படுகின்றது என்றெல்லாம், சிங்கள ஆளும்வர்க்கம் முதலைக் கண்ணீர் வடித்தது. இதை உலகமும் செவிமடுத்தே வந்தது.

புலிகளைச் சமாதானப் பாதைக்குக் கொண்டுவந்து விட்டால் இலங்கைத்தீவில் போர் ஓய்ந்து அமைதி செழித்தோங்கும் என, உலகம் கற்பனை செய்தது.

ஆனால் இந்த இரண்டு வருட காலப்பகுதியில் நடந்து முடிந்த சில அரசியல் நிகழ்ச்சிகள், உலகின் அத்தகைய அபிப்பிராயத்திற்குப் பலத்த அடியினைக் கொடுத்துவிட்டது.

1991ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி – போர் தொடங்கி ஏழு மாதங்களின் பின்னர் - புலிகளாகிய நாங்கள் இராணுவ மேல் நிலையில் இருந்துங்கூட, ஒரு தலைப்பட்சப் போர் நிறுத்தமொன்றை அறிவித்து, சிங்கள அரசிற்குச் சமாதானக் கரம் நீட்டினோம்.

இதை உலக நாடுகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றன. இலங்கைத் தீவில் சமாதானம் தழைத்தோங்கப்போகின்றதென உலகம் எண்ணியது.

ஆனால் உலகின் எதிர்பார்ப்புக்களை அலட்சியம் செய்தபடி போர் வெறியுடன், சிங்கள அரசு நாம் நீட்டிய சமாதானக் கரத்தை வெட்டி வீழ்த்தியது.

நாம் விடுத்த சமாதானச் சமிக்ஞையை உதறித்தள்ளியதற்கு, சிறீலங்கா அரசால் அரசியல் ரீதியாகப் பதில் கூறமுடியவில்லை; அவர்கள் கூறிய அறப காரணங்களை ஏற்றுக்கொள்ள உலகம் தயாராக இருக்கவில்லை.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்ச்சி நடந்து சுமார் ஒரு வருடத்தின் பின்னர் - 1992ஆம் ஆண்டின் முற்பகுதியில் - புலிகளின் முழுமையான ஆதரவுடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் ஒரு சமாதான முயற்சியை முன்னெடுத்தார்.

தொண்டமான் பகிரங்கமாகவே வெளியிட்ட தீர்வுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, மேலும் பேச்சுக்களை நடாத்த இணங்கியிருந்தோம்.


இந்நிலையில் சமாதான முயற்சி கைகூடப்போகின்றது என உலகம் மீண்டும் நம்பத் தொடங்கியது.

ஆனால் திரு. தொண்டமானின் தீர்வுத்திட்டத்திற்கெதிராகக் கிளர்ந்தெழுந்த சிங்களப் பேரினவாதம் அம் முயற்சியையும் தடுத்து நிறுத்தியது.

தொண்டமானின் தீர்வுத் திட்டத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமலேயே சிங்கள அரசு நிராகரித்து விட்டது.

சிறீலங்காவின் தொடர்புச் சாதனங்களும் சிங்களப் புத்திஜீவிகளும் பேரினவாதத்தைக் கிளறி, பேரினவாத வெறியூட்டி, சாதாரண சிங்கள மக்களையும் தீர்வுத் திட்டத்திற்கெதிராகக் கிளர்ந்தெழவைத்தனர்.

இது சிங்களப் பேரினவாதத்தினதும் - அதைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சிங்கள ஆளும் வர்க்கத்தினதும் - உண்மைச் சொரூபத்தை உலகிற்கு எடுத்துக்காட்டியது.



கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட கடற்புலிகளின் சண்டைப் படகு.

......தரையைப் போல இப்போது கடலிலும் எதிரிக்குப் புதைகுழிகள் தோண்டப்படுகின்றன......

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல், சிறீலங்காப் பாராளுமன்றத்தின் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் தமிழீழத் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு உறுதியான தீர்வுத் திட்டத்தை வரைய விரும்பாது, காலத்தை இழுத்தடித்தது. இந்தச் செயலினால், தமிழர் பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வுகாண சிங்கள ஆளும் வர்க்கம் விரும்பவில்லை என்பதை, உலகம் புரிந்து கொண்டது.

இந்த நிலையில் - அமைதிவழி மூலம் அரசியல் தீர்வுகாண சிங்கள ஆளும் வர்க்கம் விரும்பாது எமது மக்கள் மீது யுத்தத்தைத் திணித்ததால் - நாமும் ஒரு தற்காப்பு யுத்தத்தை நடாத்த நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

ஆகவே, போர் புலிகள் மீது திணிக்கப்பட்டுள்ளதேயல்லாமல் புலிகள் போரை விரும்பவில்லை; உண்மையில், போர்வெறிகொண்டது சிங்கள ஆளும் வர்க்கமேயல்லாது புலிகள் இயக்கம் அல்ல என்ற உண்மையை உலகம் கண்டுணர, இவ் இரண்டு வருடப் போர் உதவியுள்ளது.

இந்த நிலைப்பாடானது எமது போராட்டத்திற்குச் சர்வதேசரீதியாகக் கிடைத்த ஒரு அரசியல் வெற்றியாகும்.


அதேசமயம், இவ்வெற்றியை ஜீரணிக்க முடியாத இந்திய ஏகாதிபத்தியம் புலிகள இயக்கத்திற்கெதிராக - சர்வதேசரீதியில் - பொய்ப் பிரச்சாரங்களில் ஈடுபடத்தொடங்கியது. அதன் உச்சக் கட்டமாக 14-05-1992அன்று புலிகள் தடைச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியது.

இதன் மூலம், சர்வதேசரீதியில் தார்மீகரீதியாகப் பலமிழந்திருந்த சிங்களப் பேரினவாததத்திற்கு உற்சாகமூட்டி, தமிழ் இனப் படுகொலைக்கு ஆதரவாக இந்திய அரசு நடந்துகொண்டது.

ஆனாலும், இந்த அழுத்தங்கள் - பயமுறுத்தல்களுக்கெல்லாம் அடிபணியாது உறுதியுடனும் - இலட்சிய வேட்கையுடனும் - எமமுன் வந்த தடைகளையெல்லாம் உடைத்தெறிந்தபடி, போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கின்றோம்.

மேலும், தமிழீழத்தில் பல ஆண்டுகளாகச் சீர்குலைந்திருந்த சிவில் நிர்வாகத்தை இயக்குவதில், இவ் இருவருடகாலப்பகுதியிலும் கணிசமான வெற்றிகளைக் கண்டிருக்கின்றோம்.

இப்போர் நெருக்கடியிலும்கூட மக்களின் அன்றாட சமூக வாழ்வில் ஏற்பட்ட சட்டம்- ஒழுங்கு மற்றும் சமூகஇயக்கத்திற்குத் தடையாக இருந்த நிர்வாகச் சிக்கல்களையும் பெருமளவு தீர்த்துள்ளோம்.



தமிழீழ காவற் துறையின் அணிவகுப்பு.

......மக்களின் அன்றாட வாழ்வில் ஏற்பட்ட நீதி—ஒழுங்கு மற்றும் சமூக இயக்கத்திற்குத் தடையாக இருந்த நிர்வாகச் சிக்கல்கள் பெருமளவில் தீர்க்கப்பட்டுள்ளன......

இதில் தமிழீழக் காவற் துறையின் செயற்பாட்டைக் குறிப்பாகக் கூறலாம். 19- 11- 1991 அன்று, தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் தமிழீழ காவற் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு, அவர்களின் செயற்பாடுகளை அதிகாரபூர்வமாக ஆரம்பித்துவைத்தார். அதன்பின்னர் படிப்படியாக யாழ். குடாநாட்டின் பலபகுதிகளிலும் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டு, அவ்வப்பகுதிகளில் சட்டம் ஒழுங்கு பேணப்பட்டுவருகின்றது.

இவ்விதம் பலதுறைகளிலும் நாம் முன்னேறிச் செல்ல எமக்குப்பின்பலமாகவும் -மூலகாரணமாகவும் - இருப்பது, எமது படைபலம்தான்.

இந்த இரண்டு வருடகாலப்பகுதிகளிலும் எமது படைபலம் வியக்கத்தக்க வளர்ச்சியைக்கண்டுள்ளது. போராளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நவீன போர்த்தளபாடங்களின் உபயோகம் அதிகரித்துள்ளது. கடந்த இரண்டுவருட காலத்திலும் எதிரியிடம் இருந்து மிகப் பெருந்தொகையிலான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன் காரணமாக எமது ஆயுதபலமும் அதிகரித்துள்ளது.

சுருக்கமாகச் சொன்னால், ஒரு அரசின் ஆயுதப் படையைப் போன்று புலிப்படையும் வளர்ச்சிகண்டு வருகிறது.

புதிய புதிய சிறப்புப் படையணிகள் உருவாக்கப்பட்டு, புதிய புதிய தந்திரோபாயங்களும் யுக்திகளும் சேர்க்கப்பட்டு, எமது தரைப்படை விரிவாக்கம் கண்டு வருகின்றது.

இத்தகைய சிறப்புப் படையணிகளில் சாள்ஸ் - அன்ரனி சிறப்புப் படையணியைப் பிரதானமாகக் குறிப்பிடலாம். இத்துடன் பிரத்தியேகப் பயிற்சிகளைப் பெற்ற ஆண் - பெண் வீரர்களைக் கொண்ட அதிரடித்தாக்குதல் அணிகளும், மற்றும் பல்வேறு கனரக ஆயுதத் துறைகளிலும் சிறப்புப் படையணிகளை உருவாக்கியும் வருகின்றோம்.

இன்னொருபுறத்தில். விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் என்ற பெயரில் தமிழீழத்திற்கான கடற் படையொன்றையும் அமைத்து வருகின்றோம். இக்கடற்புலிகள் தமிழீழக் கடலில் எதிரி வைத்திருந்த கடல் ஏகபோகத்தைத் தகர்த்து, எதிரியின் கடல் ஆதிக்கத்திற்குச் சவாலாகச் செயற்பட்டபடியுள்ளனர்.

தரையைப் போலவே இப்போது கடலிலும் எதிரிக்குப் புதைகுழிகள் தோண்டப்படுகின்றன.

இவ்விதமாக சட்டம் - ஒழுங்கைப் பேணி, மக்கள் மத்தியிலான நிர்வாகங்களைக் கவனித்து, படைபலத்தைக் கட்டியெழுப்பி, ஒரு முழுமையான தனியரசுக்குரிய அங்கங்களை இந்த இரண்டு வருட காலத்திலும் அமைத்து அதை வளர்ப்பதிலும்முன்னேற்றம் கண்டு வருகின்றோம்.

இன்று, விடுவிக்கப்பட்ட வட தமிழீழத்தின் பெரும் பகுதிகளில் நாம் ஒரு நிழல் அரசாகச் செயற்பட்டு வருகின்றோம்.

ஒட்டுமொத்தமாகச் சொல்லப் போனால் நாம் ஒரு பூரண அரசை அமைப்பதற்குரிய தேவைகளையும், அதற்கான அனுபவங்களையும், சில படிப்பினைகளையும் இந்த இரண்டு வருடப் போர் எமது இயக்கத்திற்கு வழங்கியுள்ளது.

போரைத் தொடர்ச்சியாக வருடக்கணக்கில் நீட்டிச் செல்வதன் மூலம் புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படவைத்து, போராட்டத்தை ஒடுக்கலாம் என்றே, சிங்கள அரசு கருதியது. இந்த நோக்கத்தை விரைவுபடுத்துவதற்காக தமிழீழத்தின்மீது பொருளாதாரத் தடையையும் உற்பத்தித்தடையையும் விதித்து, தமிழீழமக்களைப் பட்டினிச்சாவின் விளிம்புக்குள் தள்ள முயன்றது.

ஆனால், போர் நீள நீள எமக்குப் போர் அனுபவமும் அதிகரித்ததுடன், மக்களும் போருக்கு இசைவாக்கம் அடையத் தொடங்கிவிட்டனர். எதை எதை சிங்கள அரசு செய்தால் மக்களும் அழிந்து போராட்டமும் தோல்வியடைந்து விடும் என மக்கள் எண்ணிப் பயந்தார்களோ, அவற்றையெல்லாம் ஒன்றும்விடாமல் சிங்கள அரசு செய்தும்கூட, அதற்கெல்லாம் ஈடுகொடுத்து - எதிர் நடவடிக்கைகளை எடுத்து - போராடி வாழ மக்கள் பழகிவிட்டார்கள்.

மேலும், தொடர்ச்சியான இரண்டுவருட பொருளாதாரத் தடை எமது மக்களுக்கு ஒரு தன்னிறைவுப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறாக, மக்களின் கண் முன்னிலையிலேயே நடந்த பிரமாண்டமான இத்தகைய மாற்றங்கள் மக்களின் மனதில்உறுதியை அதிகரிக்கச் செய்துள்ளது. இதன் காரணமாக, ஆயுதப் போராட்டத்தின் மூலம் தனியரசொன்றை நிறுவும் எமது முயற்சி சாத்தியமானதுதான் என்பதில், பெரும்பாலான மக்கள் நம்பிக்கை கொண்டுவிட்டார்கள். இதன் ஒரு அங்கமாக மக்களிடம் தேசாபிமான உணர்வு பெருகிவருகின்றது; போரால் வரும் துன்ப துயரங்களை - கஷ்டங்களை ஏற்றுககொண்டு போராட்டத்திற்கு ஒத்துழைக்கும் மனநிலை மக்களிடம் அதிகரித்துவருகின்றது. இது எமது போராட்டத்தை உறுதியுடனும் - விரைவாகவும் முன்னெடுத்துச் செல்ல உதவுவதுடன், போரில் ஏதாவதொரு வகையில தாங்களும் பங்குபற்றி வெற்றிக்காகப் பாடுபட வேண்டும் என்ற உறுதியையும் ஏற்படுத்தியுள்ளது.

மக்கள்மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட துணைப்படை இதற்கு நல்ல உதாரணம். இன்று மணலாற்றுப் பகுதியில், இத்துணைப்படையினர் தேசாபிமான உணர்வுடன் புலிவீரர்களுடன் சேர்ந்து போர் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். இத் துணைப் படையை அமைக்கும் முயற்சிகள் வடதமிழீழத்தின் ஏனைய பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டுவருகின்றது.

இந்த இரண்டுவருடப்போர்க் காலத்தில்- பல துறைகளிலும் - நாம் கண்ட வளர்ச்சிக்கு நாம் கொடுத்த விலைகள் கொஞ்சநஞ்சமல்ல. இக் காலப்பகுதியில் சுமார் 2000 இற்கும் மேற்பட்ட புலிவீரர்களை இழந்திருக்கின்றோம் அதேசமயம்10.000 இற்கும் மேற்பட்ட மக்களையும் இழந்திருக்கின்றோம். இதில் சுமார் 8000 பேர் தென்தமிழீழத்தில் மட்டும் கொல்லப்பட்டுள்ளனர்.

தென் தமிழீழத்தைப் பொறுத்த வரை இந்த இரண்டுவருட காலமும் சிங்களப் பேரினவாதத்தின் கொடுமைகள் நிறைந்த காலமாகவே அமைந்துவிட்டது. இதற்கு பிரதானகாரணம், அயலவர்களாக இதுவரை வாழ்ந்த முஸ்லிம் மக்கள்தான்.

இந்த இரண்டுவருடப் போரின் ஆரம்ப நாளிலிருந்து தமிழர்மீது எதிர்ப்பு உணர்வு கொண்ட முஸ்லிம் வெறியர்களினாலும் - முஸ்லிம் ஊர்காவற்படைகளினாலும் தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

சிங்களப் பேரினவாதத்தின் சதிவலைக்குள் சிக்கிய முஸ்லிம்கள் சகோதரர்களான தமிழர்களை தமது பகைவர்களாகவே கருதி, சிங்களப் பேரினவாத சக்திகளுடன் கூட்டுச்சேர்ந்து, கொன்று குவித்து வருகின்றனர்.

இது நாம் விரும்பாத - எதிர்பார்க்காத - ஒரு துயரம். இவ்விதம் சிங்களப் பேரினவாத சகதிக்குள் அகப்பட்ட முஸ்லிம்கள் அதற்குள்ளிருந்து மீண்டுவந்து, தமிழர்களைச் சகோதரர்களாகப் பார்க்கும் நாளைத், தமிழ்த்தேசியம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றது.

தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வுகாண சிங்கள அரசு

(11 ஆம பக்கம பார்க்க)


அமைதிவழிமூலம் அரசியல் தீர்வுகாண சிங்கள ஆளும் வர்க்கம் விரும்பாது எமது மக்கள் மீது போரைத் திணித்ததால் — நாமும் ஒரு தற்காப்பு யுத்தத்தை நடாத்த நிர்ப்பந்திக்கப்பட்டோம். உண்மையில், போர் வெறி கொண்டது சிங்கள ஆளும் வர்க்கமேயல்லாது புலிகள் இயக்கம் அல்ல என்ற உண்மையை உலகம் கண்டுணர்ந்துள்ளது.

ஆ.க.வெ. பெருஞ்சமரின் சண்டைக்களத்தில் தளபதிகள் பால்ராஜ், துசை.



...எமது படைபலம் வியக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. எமது ஆயுதபலம் அதிகரித்துள்ளது.அதனால் நவீன போர்த் தளபாடங்களின் உபயோகம் அதிகரித்துள்ளது...

'பசீலன் 2000' எறிகணையுடன் புலி வீரன்.



# சிங்களப் பேரினவாதமும் அதன் தீர்வுத் திட்டமும்

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் உருப்படியான அரசியல் தீர்வொன்றைக்கான சிங்கள ஆளும் வர்க்கம் தயாராக இல்லை என்பதற்கு, ஒரு பிந்திய உதாரணமாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் புதிய திட்டம் அமைந்திருக்கின்றது.

கடந்த ஒரு தசாப்த கால எல்லைக்குள், வட்டமேசை மாநாடு என்றும் சர்வகட்சி மாநாடு என்றும் இரண்டு தடவைகள் ஏமாற்று வித்தைகள் காட்டப்பட்டன. அந்த வகையில் - இப்போதும் கலந்தாலோசனை, கருத்தொருமைப்பாடு, கருத்திணக்கம் என்பவற்றின் அடிப்படையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக ஒரு கண்துடைப்பு நாடகத்தையே சிங்கள ஆளும் வர்க்கம் சர்வதேச சமூகத்திற்கு நடித்துக் காட்டுகின்றது. ஆனால், உண்மையில் இந்த அரசியல் தீர்வுத் திரைக்குப் பின்னால் காலத்தை இழுத்தடித்துச் சென்று தமிழினத்தை இராணுவரீதியாக ஒடுக்கிவிடவே திட்டங்கள் தீட்டப்பட்டன.

சிங்கள ஆளும் வர்க்கமானது தமிழர்களின் நியாய பூர்வமான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, இனப்பிரச்சினைக்கு ஓர் உருப்படியான தீர்வைக் காண்பதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுக்கத் தயாராக இருக்கவில்லை. அத்துடன், அப்படியான முயற்சிகளைச் செய்ய முனைந்தவர்களுக்கு ஒத்துழைக்கவுமில்லை. அரசியல் குரோதங்களினாலும் கட்சிபேதங்களினாலும் சிங்கள ஆளும் வர்க்கம் பிளவுபட்டுச் சிதறுண்டு கிடந்தாலும், தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண சமரசமுயற்சிகள் எடுக்கப்படும் எச் சந்தர்ப்பத்திலும் ஏதோ ஒரு வழியில் குறுக்கே நின்று, அவற்றிற்கு ஆப்பு வைத்து விடுவதில் கருத்து பேதமின்றியே செயற்படுகின்றது. இவ்விதமாக - கடந்த பத்தாண்டு காலத்திற்குள் இருவேறு சந்தர்ப்பங்களில், இருவேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்கள், சிங்களப் பேரினவாத ஆளும் வர்க்கத்தின் எதிர்ப்பால் செயலிழந்து போயின.

முதலாவது, இந்தியா முன்வைத்த சமரசத் திட்டம். 1987 ஆம் ஆண்டு, இந்தியா சிறிலங்காவுடன் செய்துகொண்ட ஓர் உடன்படிக்கையில் உள்ளடங்கியிருந்த இத்தீர்வுத் திட்டத்தில் - தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு மாகாணசபை ஆட்சி முறைத் திட்டம் தீர்வாக முன்வைக்கப்பட்டிருந்தது. எந்தவித ஆட்சி அதிகாரங்களு மற்ற இந்த மாகாண சபைத் திட்டத்தின் முழு அதிகாரங்களும் சிங்கள மத்திய அரசின் கைகளிலேயே குவிக்கப்பட்டிருந்தன. தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யாது, தனது தேசிய நலனையும் -தனது பூகோள அபிலாசைகளையும் நிறைவுசெய்யக்கூடிய விதத்திலேயே இந்தியா இத்திட்டத்தை வரைந்திருந்தது.

தமிழர்களின் நலன்களுக்கும் - உரிமைகளுக்கும் பாதகமான இவ்வுடன்படிக்கையை, விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பத்திலேயே எதிர்த்தது: இவ் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது. இதனால் ஆத்திரம் கொண்ட இந்தியா புலிகள் இயக்கத்தின் மீது மிகப்பெரிய போர் ஒன்றைத் திணித்தது. தமிழீழத்தை ஆக்கிரமித்த பாரதப் படைகளுடன் எமது இயக்கம் இரண்டு வருடங்களுக்கும் மேலாகப் போரிட்டது. இந்த நீண்ட யுத்தத்தில், தமிழீழத்தை நேசித்த-தமிழீழத்திற்காகப் போராடிய-இந்த மண்ணின் மைந்தர்கள் 10,000 பேர் தங்கள் உயிர்களை விலையாகக் கொடுத்துள்ளார்கள். பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களைத் தமிழீழம் இழந்தது.

தமிழர்களுடன் கலந்து பேசாமல் எழுதப்பட்டதும், தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யாததும், தமிழர்களின் நலன்களுக்கு விரோதமானதும், இவற்றின் காரணமாக தமிழர்கள் ஏற்க மறுத்ததுமான — ஒரு அரைகுறைத் தீர்வுத்திட்டத்திற்குக்கூட சிங்களப் பேரினவாத ஆளும் வர்க்கம் முட்டுக்கட்டையாகவே இருந்தது. இந்தியா இந்தச் சமரசத் திட்டத்தை முன்வைத்தபோது— அதனோடு ஒப்பந்தம் செய்து, அத் திட்டத்தை ஏற்று, அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒத்துழைத்த சிங்கள அரசு, பின்பு- அவ் உடன்படிக்கையின் அடிப்படையில் — பாரதம் அமைத்த மாகாணசபை 'பொம்மை' ஆட்சிக்கு பல சிக்கல்களைக் கொடுத்து செயலிழக்கச் செய்துவிட்டது.

அடுத்தது, —இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் திரு. தொண்டமானினால் முன்வைக்கப்பட்டது. அவர் தனது சமரச முயற்சிகளை ஆரம்பிக்கும் போதே, சிங்களப் பேரினவாத எதிர்ப்பு கொதித்தெழுந்தது. வடக்கு- கிழக்கு இணைந்த பிரதேசத்தை தமிழரின் வரலாற்றுத் தாயகமாக ஏற்று, சில முற்போக்கான அம்சங்களுடன் திரு. தொண்டமானின் தீர்வுத் திட்டம் அமைந்திருந்ததுதான் இதற்குக் காரணம். சிங்களப் பேரினவாதம் "தொண்டமான் பிரபாகரனின் ஆவி; சிங்கள இனத்தின் விரோதி" என்று கூச்சல் போட்டது. "இலங்கைத்தீவின் மூன்றிலொரு பங்கை அவர் தமிழரிடம் தாரைவார்த்துவிட்டார்" என்று ஒப்பாரி வைத்தது. "ஒரு தனிநபரின் திட்டங்கள், ஒரு நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியாது" என்று தத்துவம் பேசியது. கடைசியில் திரு. தொண்டமான் அவர்களின் கையிலிருந்து மெல்ல எழுந்து பறக்க முனைந்த சமாதானப் புறாவைப், பேரினவாத வல்லூறுகள் அடித்து வீழ்த்திவிட்டன.

இப்படித்தான் பண்டா-செல்வா ஒப்பந்தத்திலிருந்து, தொண்டமானின் தீர்வுத்திட்டம் வரை, இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை எவர் முன்வைத்தாலும் - சிங்களப் பேரினவாதிகள் அதற்கு முட்டுக்கட்டை போட்டுத் தடுத்து விடுகின்றார்கள். இனிமேலும், அதுவே நடக்கும் என்பதையே இன்றைய நிகழ்வுகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

ஆட்சிபீடம் ஏறுகின்ற சிங்களக் கட்சிகள் எல்லாமே, தமிழர் பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வை எப்போதுமே முன்வைத்ததில்லை. தமது ஆட்சிக்காலம் முடியும் வரை பிரச்சினையை இழுத்தடித்து - இக் காலத்திற்குள் - இயலுமானவரை தமிழ்த் தேசியத்தைச் சிதைத்து விட்டுச் செல்வதையே, அவர்கள் நோக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறாக - காலத்தை இழுத்தடிக்கும் கருவிகளுள் ஒன்றாகத்தான் இப்பொழுது, பாராளுமன்றத் தெரிவுக்குழு தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசுவதற்கான முயற்சிகளைத் தான் எடுத்தால், சிறீலங்கா சுதந்திரக்கட்சி, மற்றும் எதிர்க்கட்சிகள் பேரினவாதத்தைத் தட்டி எழுப்பி, குட்டையைக் குழப்பி, தனது ஆட்சிக் கதிரைக்கு ஆபத்தைக் கொண்டுவந்துவிடுவார்கள் என அஞ்சுகின்றார் திரு. பிரேமதாசா. தனது பதவிக்காலத்தைப் பாதுகாப்பதும், அக்காலம் முடியும் வரை ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி பிரச்சினையை இழுத்தடித்துச் செல்வதுமே, அவரின் நோக்கம். எனவே-விடுதலைப் புலிகளின் அநுசரணை இல்லாமல் காணப்படும் எந்த ஒரு தீர்வும் நடைமுறைக்கு ஒவ்வாதது என்பதைத் தெரிந்திருந்தும், திரு. பிரேமதாசா தெரிவுக்குழுவுக்கு அதிக முக்கியம் கொடுக்கின்றார். தெரிவுக்குழுவில் தான் முழுநம்பிக்கையும் வைத்திருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் அவர், தெரிவுக்குழு முடிவு செய்யும் தீர்வை அரசு உடனடியாக நடைமுறைப்படுத்தும் எனவும் உறுதி வழங்குகின்றார்.

ஆனால், கடந்த ஒருவருட காலமாகச் செயற்பட்டுவருகின்ற இத்தெரிவுக்குழுவுக்குள் வடக்கு-கிழக்கு இணைப்புத் தொடர்பாக இழுபறி நிலை உருவாகியது. சமீபத்தில், இந்த முரண்பாடுகள் முற்றி - பிரதான சிங்களக் கட்சிகளுள் ஒன்றான - சிறீலங்கா சுதந்திரக்கட்சி அதிலிருந்து விலகியதால் தெரிவுக்குழு பிளவுபட்டுச் செயலிழந்தது.

---

**தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான - அமைதி வழியிலான, தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதுமான ஒரு நியாயமான தீர்வை சிங்களப் பேரினவாதம் எப்போதுமே தரப் போவதில்லை.**

---

இதே நேரத்தில் - இந்திய மத்திய அரசு புலிகள் இயக்கத்தைத் தடை செய்தது: அதன்மூலம் பிரேமதாசா அரசாங்கம் மீது ராஜதந்திர அழுத்தத்தைப் பிரயோகித்தது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி - குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதைப் போல-சிறீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவுக்குழுவிலிருந்து வெளியேறியதுடன், "சிறீலங்காவிலும் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட வேண்டும்" என்றும் கூச்சலிட்டு ,அரசியல் இலாபம் தேட முயன்றது.

ஆனால், தெரிவுக்குழு உடைந்து போனதுடன், புதிதாகப் பிறந்துள்ள குழப்பகரமான சூழ்நிலையானது புலிகளுக்குச் சார்பாக அமைந்து விடும் என, இந்தியா கருதியது. "தமிழர் பிரச்சினைக்கான உருப்படியான தீர்வொன்றை சிங்களப் பேரினவாத ஆளும் வர்க்கம் எப்போதுமே தரப்போவதில்லை" என்ற புலிகளின் நிலைப்பாடு சரியானதே என, சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டு விடும் என்று, இந்தியா அஞ்சியது. எனவே தெரிவுக்குழுவில் மீண்டும் இணைந்து அதற்கு உயிர் கொடுக்குமாறு, சிறீலங்கா சுதந்திரக் கட்சியை இந்தியா நிர்ப்பந்தித்தது.

இதே வேளையில் - தெரிவுக்குழுவின் உடைவைச் சீர் செய்து, அதனை மீண்டும் இயங்க வைப்பதற்கு, கொழும்பில் முடங்கிக் கிடக்கும் தமிழ்க் குழுக்களும் மிகுந்த பிரயத்தனம் செய்தன. இன்று தம்மைப் பிரதானப்படுத்திக் கொண்டிருக்கும் தெரிவுக்குழு செத்துப்போனால், புலிகளின் கூற்று நியாயமானது என முதன்மை பெற்றுவிடும். அவ்வாறு நடந்துவிட்டால், தமக்கு அரசியல் எதிர்காலம் என்ற ஒன்றே இல்லாமல் போய்விடும் என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது.

அதனால் - இந்திய அரசும் கொழும்பிலுள்ள இந்திய சார்புத் தமிழ்க் குழுக்களுமாகச் சேர்ந்து அழுத்தம் போட்டு, சிறீலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் தெரிவுக்குழுவுடன் இணையச்செய்தன. இப்போது, தெரிவுக்குழு புத்துயிர் பெற்று எழுந்து நிற்கிறது.

இருந்தபோதிலும் - சிங்கள ஆளும் வர்க்கத்தின் பிரதான கட்சிகளான ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியோ, எதிர்க் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியோ, தீர்வுக்கான தீர்க்கமான யோசனை எதனையும் முன்வைக்க வில்லை. ஏனென்றால், வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்ற தமிழர்களின் அடிப்படைக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட - ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்க சிங்களப் பேரினவாதிகள் தயாராயில்லை.

இந்நிலையில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களைத் தனித்தனி மாகாண அலகுகளாகக் கொண்ட ஒரு தீர்வுத் திட்டத்தை, இத் தெரிவுக்குழு பிரேரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

வட - கிழக்கு என்பது பிரிக்கமுடியாத தமிழர் தாயகமாகும்.

வட - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தைச் சிங்களப்பேரினவாதக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை, இந்தப் புதிய திட்டம் மீண்டுமொரு முறை தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது.

தமிழீழத்தின் வடபிராந்தியத்தையும், அதன் தென் பிராந்தியத்தையும் நிரந்தரமாகத் துண்டாடி - தென்பிராந்தியத்தை முற்று முழுதாகச் சிங்கள மயமாக்கிவிடும் சிங்கள ஆளும் வர்க்கத்தின் அந்தரங்க நோக்கம், இங்கே தெளிவாகியுள்ளது.

ஒட்டுமொத்தத்தில் 35 ஆண்டுகளுக்கு முன்னர் பிரேரிக்கப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும் விட, 5 ஆண்டுகளுக்கு முன் பிரேரிக்கப்பட்ட இந்திய - சிறீலங்கா உடன்படிக்கையையும் விட, மிகக் குறைந்த உரிமைகளையே தமிழர்களுக்கு வழங்குகின்றது. தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளுள் ஒன்றான தமிழர் தாயகக் கோட்பாட்டையே இத்திட்டம் நிராகரிக்கின்றது.

கடந்த 40 ஆண்டுகால வரலாறு-அதிலும் குறிப்பாக கடந்த ஒரு தசாப்தகால நிகழ்வுகள், எமக்கு ஒரு வரலாற்று உண்மையை மிகத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான - அமைதி வழியிலான ஒரு நிரந்தரத் தீர்வை- தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு நியாயமான தீர்வை - சிங்களப் பேரினவாத ஆளும் வர்க்கம் எப்போதுமே தரப்போவதில்லை. எமது அரசியல் உரிமைகளை வென்றெடுக்க நாம்தான் போராட வேண்டும். நாமாகவே போராடியே எமது தன்னாட்சி உரிமையை நிலைநாட்ட வேண்டும். இந்த யதார்த்த உண்மையை இப்போது எமது மக்களும் உணரத் தொடங்கிவிட்டார்கள். ❋

# இணைந்த ஒளிகள்

புலிகளின் காட்டு முகாம்.

அன்சாரினதும், யேசுதாசினதும் உடல்கள் வைக்கப்பட்டிருந்தன. சண்டையின் களைப்பு, தம் தோழர்களை இழந்துவிட்ட மனதின் தாக்கம், வெளிக்காவல் நிலைகளிலிருந்த தோழர்களைத் தவிர அனைவருமே இருந்த இருந்த இடத்தில் தூங்கிவிட்டார்கள்.

இந்தியர்களின் கண்களிற்குத் தென்படக்கூடாது என்ற முடிவுடன், குப்பி விளக்கொன்று மங்கிய ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தது. அந்த விளக்கொளியில்... யேசுதாசின் கறுத்த, அழகிய முகத்தைப் பார்த்தபடியே ......, கலைந்து கிடந்த அவனது தலையைத் தடவியபடியே... நந்தன் இருந்தான்.

## கப்டன் யேசுதாஸ்

**(வீரகத்தி விக்னேஸ்வரன்)**

கற்குளம், நெடுங்கேணி.

பிறப்பு: 01. 10. 1965

வீரச்சாவு: 29. 07. 1989



அவனது தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது. இடை இடையே குலுங்கிக் குலுங்கி அழுதான். பெரிதாகச் சத்தமிட்டு அழவிரும்பியும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான் போலும்! மெல்லிய முனகல் சத்தம் இடை இடையே கேட்டு அடங்கியது.

மனிதர்களில் சிலர் இழப்புக்களை ஏற்றுக்கொண்டு அதனைத் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவத்தைப் பெற்றுக்கொண்டாலும், அவர்களை அசைத்துப் பார்க்கும் சம்பவங்களும் நடந்துகொண்டு தானே இருக்கின்றன.

நந்தனால் இந்த இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியுமா........? இல்லை. முடியாது...... அவனால் முடியாது.

❋ ❋

யேசுதாஸ் பிறந்த பிற்பாடு நாட்கணக்கு மாதக்கணக்கு எல்லாம் பார்த்தால், சரியாக இரண்டு வருடத்திற்குப் பின்பு நந்தனைத் தாயார் பெற்றெடுத்தாள். நிறம், முகம், சிரிப்பு எதிலுமே வித்தியாசமில்லை. ஆனால் சின்னவன் நந்தன் சிறிது குழப்படிகாரனாக இருந்தான்.

அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் அன்பைக் கொட்டி, அடிபட்டு, கடிபட்டு ஒன்றாகவே வளர்ந்தார்கள். பாடசாலைக்குச் செல்கையிலும் வயலில் காவலுக்கு நிற்கையிலும், அந்தி சாயும் நேரங்களில் பட்டிகளை ஓட்டி வருகையிலும், ஏன் மூத்த அண்ணனுக்குப் பயந்தபடியே ஆற்று நீரில் பாய்ந்து விளையாடுகையிலும், அவர்கள் சேர்ந்தே இருந்தார்கள்.

நந்தன் அந்த இளவயதிலேயே அண்ணனில் உயிரை வைத்திருந்தான். உண்மையில் அது எவ்வளவு இனிமையான நாட்கள். அவர்கள் வயலிற்கு இரவுக் காவலுக்குச் செல்வார்கள். 'இருட்டு....... நீர் நிறைந்த வயல்களின் வரம்புகளில் விஷங்கள் ஏதாவது கிடக்கலாம்' — அந்த நினைவு வந்தவுடனேயே அவன் அண்ணனை நிறுத்திவிட்டு, முன்னால் பாய்ந்தோடுவான்.

'ஏதாவது கடிக்கிறதா இருந்தா அது என்னைக் கடிக்கட்டும்' எனத் தனக்குள் முணுமுணுப்பான்.

வீட்டிலும் அப்படித்தான் தனக்கென தனியாக எதையுமே எடான். எல்லாமுமே அண்ணனுக்கும் வேண்டும்; அல்லது அது அவனுக்கு வேண்டாம்.

அம்மா மட்டும் உள்ளுக்குள் மகிழ்ச்சியோடு ஏசுவாள். "அவனுக்கு அண்ணனில பைத்தியம் பிடிச்சிருக்கு."

அந்தச் சிறு வயது நாட்கள்தான் எவ்வளவு விரைவாகக் கடந்து போயின.

வளர்ந்த பின்பும் தோற்றத்தில் அவர்களிடையே பெரிதாக எந்த வித்தியாசமும் இல்லை. ஆனால் குணவியல்புகளில் நிறையவே வேறுபட்டார்கள்.

யேசுதாஸ் உணர்ச்சிக்கு ஆட்படுவதைத் தவிர்த்தான். பேச்சுக்களைத் தவிர்த்து எப்போதும் அமைதியாக இருந்தான். சில நேரங்களில் மட்டும் மிக அருமையாகக் கோபப்பட்டான்.

நந்தனோ அதிகமாக உணர்ச்சி வசப்படுபவனாகவும், கோபப்படுபவனாகவும் இருந்தான். சில நேரங்களில் மட்டும் அண்ணனுக்குச் சொந்தமான அமைதிக்கு அடிபணிந்து இருந்தான்.

சின்ன வயதில் தோன்றிய வயல்வெளிப் பழக்கம்; இனிமையான குரல் இருவருக்கும் சொந்தமானதாக இருந்தது. அதிலும் பாருங்கள் ஒரு வேறுபாட்டை. யேசுதாஸ் எப்போதுமே அமைதியான இதயத்தை வருடும் சோகப் பாடல்களையே பாடினான்; நந்தனோ உற்சாகம் நிறைந்த மகிழ்ச்சியான பாடல்களை விரும்பி அடிக்கடி பாடினான்.

வன்னியின் அந்த எல்லையோரக் கிராமங்களின் அமைதிதான் எவ்வளவு விரைவாக அழிந்து போனது!

டொலர், கென்ற் பண்ணைகளிலிருந்த தமிழர்களை விரட்டிவிட்டு சிங்களக் காடையர்கள் குடிபுகுந்தனர். தொடர்ந்தும்... நாவலர் பண்ணை, தனிக்கல்லு என தமிழர் கிராமங்கள் பறிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. வேறொரு புறத்தால் காடுகள் அழிக்கப்படத் தொடங்கின.

தமிழர் கிராமங்களின் வயல்வெளிப் பாடல்களுக்கு நடுவே, காடழிக்கும் இயந்திரங்களின் கொடூர ஓசையும் கலந்துகொள்ளத் தொடங்கியது.

அந்த நாட்களில்தான், மார்கழி மாதத்தின் மழைத்தூறல் விழுந்து கொண்டிருந்ததோர் மாலைநேரம், யேசுதாஸ் கிராமத்தை விட்டு வெளியேறிச் சென்றான்.

புலிகளின் ஆறாவது பயிற்சி முகாம்.

பயிற்சி எடுத்துக்கொண்டிருந்த புதியவர்களில் யேசுதாசும் ஒருவன். இனிமையான அவனது குரலைக் கேட்ட யாரோ, அவனுக்கு யேசுதாஸ்என்ற தென்னிந்தியப் பாடகரின் பெயரை வைத்துவிட்டார்கள்.

அண்ணன் சென்றதன் பின்பு நந்தனால் தனித்து இருக்க முடியவில்லை. அதிகமாக நண்பர்களை நாடினான். அவர்களின் அர்த்தமற்ற வாழ்க்கை அவனுக்கு வெறுப்பாக இருந்தது. இதனிடையே ஓதியமலையிலும், பட்டிக்குடியிருப்பிலும் மிகப்பெரும் இனப்படுகொலைகள் நடந்து முடிந்தன. அந்தப் பழந்தமிழ்க் கிராமத்தவர்கள் சிங்கள வன்முறையாளர்களால் விரட்டப்பட்டிருந்தார்கள். சிங்களக் காடையர்களின் வெறிச் செயல்களுக்கு அயல் கிராமமான கற்குளமும் உள்ளாகியது.

சிங்களக் காடையர்கள் அடிக்கடி கிராமங்களில் நுழைந்தார்கள். நெற்கதிர்கள் பூத்துக் குலுங்கும் பொழுது வயல் நிலங்கள் எரிந்தன. கைக்கெட்டும் கிராமத்துக் குடிசைகள் எரிந்து சாம்பராகும். இந்த நிலையில், தன் தாய்மண்ணை நேசிக்கும் எவனால்தான் போராட்டத்திலிருந்து ஒதுங்கி வாழமுடியும்?

சில நாட்களில் நந்தனும் புலிகளுடன் இணைந்துகொண்டான்.

பயிற்சியை முடித்த பின்பு வன்னி மண்ணுக்கு வந்த யேசுதாஸ் மேஜர் தாடிபாலாவின் குழுவில் ஒருவனாக நின்று, சிறிலங்கா இராணுவத்தினருக்கெதிராகப் போரிட்டான். M. 16 சுரிகுழல் துப்பாக்கியை இயக்குவதில் அவன் மிகவும் வல்லவனாக இருந்தான். குறி இலகுவில் தவறுவதில்லை. முதலாவது சூட்டில் எதிரி ஒருவன் விழுந்தே இருப்பான்.

அமைதி என்ற போர்வையில் இந்தியர்கள் வந்துசேர்ந்த சில நாட்களின் பின்பு, முகாம் ஒன்றில் தற்செயலாகச் சந்தித்துக்கொண்ட நந்தனும் யேசுதாசும் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

குடும்பத்தின் நிலையைக் கருத்தில் எடுத்து அம்மாவின் ஆறுதலுக்காக நந்தன் வீட்டில் நிற்பதென்றும், யேசுதாஸ் இயக்கத்தில் தொடர்ந்து இயங்குவதென்றும், தீர்மானித்துக்கொண்டார்கள். கிராமத்தில் நின்றாலும் நந்தன் புலிகளின் அரசியல் வேலைகளில் முழுமையாகவே செயற்பட்டுக் கொண்டிருந்தான். அத்துடன் பட்டிக்குடியிருப்பு பாடசாலையில் சேவை அடிப்படையில் இயங்கும் ஆசிரியராகவும் இருந்தான்.

இந்தியர்களின் வேடம் மிக விரைவாகவே அம்பலப்பட்டு, இந்தியப் படைகளுக்கெதிரான போரில் தமிழீழம் குதித்தது. வீட்டில் நின்ற நந்தன் இந்தியப்படையினருடன் மோதல் தொடங்கியவுடன், இயக்கத்தில் மீண்டும் இணைந்துகொண்டான். சண்டைகள் இப்போது அதிகமாகவும் கடுமையாகவும் இருந்தன. அந்தச் சகோதரர்கள் இருவரும் அவர்கள் பிறந்து வளர்ந்து விளையாடிய மண்மடியிலே, துப்பாக்கிகளும் தோழர்களுமாக எதிரியைத் தேடி அலைந்து திரிந்தார்கள்.

நந்தன் இப்போதும் அப்படித்தான், அண்ணனுக்கு முன்பாக மிக வேகமாக நடப்பான். 'வருகின்ற ஆபத்து எதுவாக இருந்தாலும் அது முதலில் என்னைத் தாக்கட்டும்' என்று, அவன் மனம் சொல்லும். யேசுதாசோ எதையும் வெளிக்காட்ட மாட்டான். இரவுகளில் மட்டும் அவனுக்குப் பிடித்தமான அந்தச் சோகப் பாடல்களை மெதுவாக முணுமுணுப்பான்.

இப்படித்தான் இன்று காலையும் அவர்கள் எல்லோரும் ஒன்றாகப் புறப்பட்டார்கள். சண்டை கடுமையாகவே இருந்தது. எதிரி இருப்புக் கொண்டிருந்த அந்தச் சிறிய முகாமின் வாசலில் யேசுதாஸ் விழுந்தான். அவனது உடலை எடுத்துக்கொண்டு பின்வாங்கிய பொழுது, வேறொரு தோழன் அன்சாரின் உடலையும் சுமந்து வந்தான்.

அன்று இரவு முழுவதும் நந்தன் தூங்கவில்லை. மறுநாள், அவனது அண்ணனையும் அவனது தோழனையும் புதைத்துவிட்டு வந்த பின்பும் அவன் தூங்கவுமில்லை, சாப்பிடவும் இல்லை. ஏன்...? அதிகமாக ஒருவருடனும் கதைக்கக் கூட இல்லை.

நாட்கள் சென்றன. சூழ்நிலைகளும் மாறிக்கொண்டிருந்தன. நந்தனோ தளராத உறுதியுடன் போராடிக் கொண்டிருந்தான். எதிரியோ இழப்புக்களைக் கண்டு போராளிகள் அஞ்சி ஒடுங்கிப்போய் விடுவார்கள் என, நினைக்கின்றான். ஆனால் புலிகளோ அதனாலேயே உறுதி கொள்கிறார்கள்; வெற்றியைப் பெறவேண்டும் என்ற ஓர்மத்துடன் போராடுகின்றார்கள்.

ஆனால், நந்தனில் புதிய மாற்றம் ஒன்று இருக்கத்தான் செய்தது. அவனது அண்ணனுக்குச் சொந்தமான அமைதியான அந்தச் சோகம் நிறைந்த பாடல்களை, அவன் இப்போது முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

இந்தியர்கள் வெளியேறினார்கள். சமாதானம் பேசிக்கொண்டிருந்த சிங்களப் பேரினவாதம், தன் கொடூரமுகத்தைக் காட்டத் தொடங்கியது. மீண்டும் நாடெங்கும் சிங்களச் சிப்பாய்களை எதிர்த்து புலிகள் போரிட்டார்கள்.

நந்தனும் ஒரு புலிவீரனாக சண்டைக்களங்களில் நின்று செயற்பட்டான்.

மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து சிங்களப் படைகள் வெளியேற முயன்ற ஒரு நாள்...... தோழர்களுடன் நந்தனும் சண்டையிட்டுக் கொண்டிருந்தான். ஆக்கிரமிப்பாளர்களின் ஒவ்வொரு அசைவிற்கும் போராளிகள் பதில்சொல்லிக் கொண்டிருந்தார்கள். அன்றைய சண்டையின் முடிவில் நந்தனும்......

## லெப். நந்தன்

**(வீரகத்தி இராஜேந்திரன்)**

கற்குளம், நெடுங்கேணி.

பிறப்பு : 06. 01. 1969

வீரச்சாவு: 17. 07. 1990



இப்போதும் அந்தக் காடு...... அவர்களின் கல்லறைகள்...... எங்குமே அவர்கள்...... இப்போதும் அங்கு சென்று பாருங்கள் — அவர்களின் அந்த இனிய, சோகம் நிறைந்த பாடல்கள், காற்றில் மிதந்து நெஞ்சை அழுத்தும்.

— வில்வன் ❋

# இந்திய வெளியுறவுக் கொள்கையும் தமிழீழதேசமும்

பழைய உலக ஒழுங்கின் பிரகாரம் வல்லரசுகள், குட்டி வல்லரசுகள், பிராந்திய வல்லரசுகள் என்று உலகில் இராணுவ பலம் கொண்டிருந்த நாடுகள் தங்களது பலத்தைக் காட்டி மற்றைய நாடுகள்மீது ஆதிக்கம் செலுத்தி வந்தன.

இதன் அடிப்படையில் தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியா தன்னை ஒரு பிராந்திய வல்லரசாகக் கருதி, அயல் நாடுகளைத் தனது ஆதிக்கத்திற்குள் வைத்திருக்கும் முறையில், அயல் நாடுகள் தொடர்பாக மேலாதிக்கவாதம் நிறைந்த ஒரு வெளிவிவகாரக் கொள்கையையும் வகுத்து செயற்படுத்தி வருகின்றது. இதனால் அதனது அயல் நாடுகளிடமிருந்து இந்தியா எதிர்ப்பையும் வெறுப்பையும் தாராளமாகச் சம்பாதித்து வைத்திருக்கிறது.

தென்னாசியப் பிராந்தியத்தில் மொத்தம் ஏழு நாடுகள் உண்டு. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, நேபாளம், பூட்டான், மாலைதீவு என்பவையே அவையாகும்.

இவற்றுள் அநேகமாக அனைத்து நாடுகளும் இந்தியாவை வெறுப்புடனேயே பார்க்கின்றன.

இலங்கைத்தீவைப் பொறுத்தவரை இங்கு வாழும் இருவேறு தேசிய இனங்களும் இந்தியா தொடர்பாக, இருவேறு நிலைப்பாட்டிலேயே இருந்துவந்தன.

சிங்கள தேசிய இனம் இந்தியாவை ஒரு ஆக்கிரமிப்புச் சக்தியாகவே மிக நீண்ட நெடுங்காலத்திலிருந்து கருதிவருகின்றது.

தமிழ்த் தேசிய இனம் மிக நீண்ட காலத்திலிருந்து இந்தியாவை ஒரு நேச சக்தியாகவே பார்த்து வந்தது.

ஆனால் இன்று, இந்திய ராஜதந்திரத்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட பாரிய தவறுகளினால் இப்பிராந்தியத்திலேயே இந்தியாவின் ஒரே ஒரு நேச சக்தியாக இருந்த தமிழ்த் தேசிய இனத்தை, இந்தியாவே தனது பகைமைச் சக்தியாகப் பிரகடனப்படுத்திவிட்டது.

தமிழீழத்தின்மீதான ஆக்கிரமிப்புக் கறையை அகற்றவேண்டிய இந்திய அரசு அவ்விதம் செய்யாது, ஆக்கிரமிப்புக்குச் சமனாக இன்னுமொருபடி சென்று புலிகள் இயக்கத்தைச் சட்டபூர்வமாகத் தடைசெய்துள்ளது.

இத்தடைமூலம் தமிழீழத் தேசிய இனத்தை இந்தியா தனது நிரந்தர எதிரியாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

புலிகள் இயக்கம்தான் தமிழீழ மக்களின் ஒரேயொரு போராட்டச் சக்தி என்பதும், அதுதான் இன்று தமிழீழத் தேசிய இனத்திற்குத் தலைமைதாங்கி தமிழீழமக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை வழிநடாத்திச் செல்கின்றது என்பதும், உலகம் அறிந்த உண்மைகள்.

எனவே புலிகள் இயக்கத்தின் மீதான தடை என்பதன் அர்த்தம், தமிழீழத் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு விதிக்கப்பட்ட தடையே என்பதில் எள்ளளவு சந்தேகமும் இல்லை. இது தொடர்பாக இந்தியா என்னவிதமான கட்டுக்கதைகளைச் சொன்னாலும், இந்தியாவின் கடந்தகால நடைமுறைகள் இதைத் துல்லியமாகக் காட்டும். புலிகளை அழித்துப் போராட்டத்தை ஒடுக்குவதிலேயே இந்தியா கண்ணுங் கருத்துமாக இருந்துவருகின்றது.

தமிழீழ மக்களின் பூர்வீக எதிரியான சிங்கள ஆட்சியாளர்களுடன் சேர்ந்து தமிழீழமண்ணை ஆக்கிரமித்த இந்தியா, சுமார் இரண்டு வருடங்கள் தமிழீழத்தில் நடாத்திய அநர்த்தங்கள் - அழிவுகள் உலகறிந்த விடயம்.

தமது நேச சக்தியான தமிழீழ மக்களுக்கு இழைத்த வரலாற்றுத் தவறை, அதனால் இந்தியா அடைந்த கறையை இல்லாதொழிக்கப் பாடுபடவேண்டிய இந்திய ராஜதந்திரிகள், அவ்விதம் விவேகமாகச் செயற்படாது, தமிழீழத்தின்மீதான தமது ஆக்கிரமிப்புத் தோல்விக்குக் காரணமான புலிகள் இயக்கம்மீதும் - அதன் தலைவர் பிரபாகரன்மீதும் ஆத்திரம் கொண்டு, பழிவாங்க அலைந்து திரிகின்றனர்.

இந்திய ராஜதந்திரிகளின் இந்த ஆத்திரத்திற்கும், பழிவாங்கும் உணர்வுக்கும் மூலகாரணமாக இருப்பது, அயல் நாடுகள் தொடர்பாக மேலாதிக்கப் போக்கு நிறைந்த இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைதான்.

இப்பழைய - காலத்திற்கொவ்வாத - வெளிவிவகாரக் கொள்கையின் உந்துதலாலேயே இந்தியா தமிழ் தேசிய இனத்தைப் பகைமை உணர்வுடன் அணுகுகின்றது.

அக்கொள்கையின்படி தமிழீழம், இந்திய தேசத்திற்கு அடங்கி ஒடுங்கி, இந்தியத் தேசிய நலனுக்குச் சேவகம் செய்திருக்க வேண்டும். அப்படித்தான் இந்திய ஆளும் வர்க்கம் எதிர்பார்த்தது; எதிர்பார்க்கின்றது.

ஆனால் புலிகள் இயக்கமாகிய நாங்கள், எமது தாய்நாட்டின் நலனுக்காக - எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றவே - இரத்தம் சிந்தி, தியாகங்கள் புரிந்து போராடுகின்றோம்.

எமது மக்களின் இரத்தத்தையும் கண்ணீரையும் தனது தேசிய நலனுக்காகப் பயன்படுத்தவேண்டும் என்ற இழிமைத்தனத்தை, இந்தியா கைவிடவேண்டும்.

இன்று, மாறிவரும் உலக ஒழுங்கின் பிரகாரம் உலகின் தேசிய இனங்கள் பல, தன்னாட்சி உரிமையைப் பெற்றபடி இருக்கின்றன. அவற்றிற்கு, முன்னைய வல்லரசுகளும், குட்டி வல்லரசுகளும் அங்கீகாரம் அளித்து வழிவிடுகின்றன. பல பிராந்திய வல்லரசுகளும் தமது உள்நாட்டு - வெளிநாட்டுக் கொள்கைகளை மாறிவரும் உலக ஒழுங்கிற்கேற்ப மாற்றியமைத்து வருகின்றன.

இந்த யதார்த்தப் போக்கை இந்தியா உணர்ந்துகொள்ளவில்லையென்று கூறமுடியாது.

உலக வல்லரசுகளுடனான உறவைக் காலத்திற்கேற்ப அது மாற்றிக்கொண்டு விட்டது. ஆனால், தனது பிராந்தியத்திலுள்ள அயல் நாடுகளுடனான கொள்கையில் மாற்றங்களைக் கொண்டுவரத் தயங்குகின்றது.

தென்னாசியப் பிராந்தியம் தொடர்பான இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் வேரோடியிருக்கும் மேலாதிக்கத்தையும், அதனால் எழும் பகைமை உணர்வையும், பழிவாங்கலையும் இந்தியா கைவிடவேண்டும்.

இல்லாவிடின், அயல் நாடுகளுடனான இந்தியாவின் உறவுகள் மேலும் மேலும் மோசமடைவதைத் தடுக்கமுடியாமல் போகும்.

இதற்கு நல்லதொரு பிந்திய உதாரணம், இதுவரை நேச சக்தியாக இருந்த தமிழீழத் தேசிய இனத்தை இந்தியாவே அவசரப்பட்டு பகைமைச் சக்தியாகப் பிரகடனப்படுத்தியதுதான்.

ஆகவே, தமிழீழம் குறித்த இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பான அணுகுமுறையில் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என, நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ஏனெனில், தமிழீழ மக்கள் இந்தியாவின் நேச சக்தி என்பதை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும். ❋

# தமிழீழ விடுதலைப்....

( 5 ஆம் பக்கத் தொடர்ச்சி )

வற்புறுத்தல்மூலமும் வசதிபடைத்த தமிழர்களிடமிருந்து பெற்றுவந்த அதேவேளை, முஸ்லிம் சமூகத்திலிருந்து இந்நிதியை நாம் பெறவேயில்லை. ஒரு சில சம்பவங்கள் அப்படி நடந்திருந்தாலும் கூட அவை உடனடியாகவே எமது தலைமைப்பீடத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

இவ்விதம் தாரான மனப்பான்மைகள், மென்போக்குகள், விட்டுக் கொடுப்புகள், சகிப்புத்தன்மைகள் போன்ற அணுகுமுறைகள் மூலம் முஸ்லிம் மக்களை அணிதிரட்ட நாம் எடுத்த முயற்சிகள் முடிவில் படுதோல்வியே அடைந்தன.

### 1990 இல் வெடித்த போருக்குப் பின்

சிறீலங்கா அரசுடனான பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட முரண்பாடுகள் சிறிது சிறிதாக 1990 யூன் 10 ஆம் திகதி, போராக வெடித்தது.

மட்டக்களப்பு - அம்பாறையில் சிங்களப்படைகளுக்கும் புலிகளுக்குமிடையில் சண்டைகள் நடந்தன.

ஆனால் நாம் யாருமே எதிர்பாராதவகையில், பொத்துவில் பகுதியில் வாழ்ந்துவந்த தமிழ் மக்கள் முஸ்லிம் வெறியர்களினால் வேட்டையாடப்படத் தொடங்கினர். தமிழ் மக்களின் வீடுகள் கொளுத்தப்பட்டு, சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டு, தமிழ்ப் பெண்கள் முஸ்லிம் வெறியர்களினால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டனர்.

பொத்துவிலில் தொடங்கிய முஸ்லிம் இனவாதம் அம்பாறை மாவட்டமெங்கும் பரவி, தமிழ் மக்களைக் கொன்றொழிக்கத் தொடங்கியது.

இது எமக்குப் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் கொடுத்தது.

சிங்களப்படைகளுடன் பெரியளவில் போர் நடந்துகொண்டிருந்தபடியால், முஸ்லிம் வெறியர்களிடமிருந்து தமிழ்க் கிராமங்களை எம்மால் பாதுகாக்க முடியாமற் போய்விட்டது.

இப்பொழுது தென்தமிழீழ மக்கள் சிங்கள ஆயுதப்படைகளினாலும் - சிங்களக் குடியேற்ற வாசிகளினாலும், முஸ்லிம் வெறியர்களினாலும் இனப்படுகொலைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் தென்தமிழீழத்தில் முஸ்லிம் - தமிழ் மோதல் நடக்குமானால், குறித்த சில கிராமங்களுக்கிடையே நடப்பதுதான் வழமை.

ஆனால் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆம் திகதி சிறீலங்காப் படைகளுடன் போர் தொடங்கியதும், தென்தமிழீழத்தில் வாழ்ந்த மிகப் பெரும்பாலான முஸ்லிம்கள் வெறிகொண்டு - மிலேச்சத்தனமான வழிமுறைகளில் - தமிழர்களை வேட்டையாடத் தொடங்கினர். அம்பாறை தமிழர்களின் மயானம் ஆகியது. குறிப்பாக பாலியல் வன்முறைகளில் காட்டுமிராண்டிகளின் நிலைக்கு முஸ்லிம் வெறியர்கள் சென்றனர். இதில் வேதனையானதும் வெட்கக் கேடானதுமான விடயம் என்னவென்றால், கடத்திவரப்படும் தமிழ்ப் பெண்கள் முஸ்லிம் கிராமங்களுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கேயே பாலியல் வன்முறைக்குட்படுத்தப் படுவதாகும். அம்முஸ்லிம் கிராமத்திலிருக்கும் ஆண் - பெண், பெரியோர், சிறியோர், படித்தோர் - பாமரர் அனைவரும் அறிந்த நிலையிலேயே இம்மிலேச்சத்தனம் நடைபெறுகின்றது. இது பெண்களை உயர்வாகப் போற்றுவதாகச் சொல்லிக்கொள்ளும் முஸ்லிம் மதக்கலாசாரத்திற்கு, மிக இழிவைத் தேடிக் கொடுக்கும் அநாகரீகச் செயல்கள் ஆகும்.

அம்பாறை மாவட்டம் இலங்கைத் தீவிலேயே முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாவட்டமாகும். இந்த மாவட்டத்தில் நடாத்தப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் அதிக நிலப்பரப்புகளையும், பொருளாதார வாய்ப்புகளையும், உரிமைகளையும் இழந்தது தமிழர்கள் அல்ல; முஸ்லிம் மக்கள்தான்.

ஆனால் இந்த அத்துமீறிய குடியேற்றத் திட்டங்களைத் தடுத்து நிறுத்த நாம் எடுத்த ஆயுத நடவடிக்கைகளினால், சிங்களப் பேரினவாதிகளின் நில அபகரிப்பு நோக்கம் பல இடையூறுகளைச் சந்தித்தது. இதனால் நன்மையடைந்தது தமிழர்களைவிட முஸ்லிம்கள்தான். ஆனால் இவ்வளவுதூரம் இன அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட சிங்களப் பேரினவாதிகளை நண்பர்களாகவும், முஸ்லிம்களின் உரிமைக்காகவும் போரிட்டு எண்ணற்ற தியாகங்கள் புரிந்துவரும் தமிழர்களை எதிரிகளாகவும் முஸ்லிம்கள் கணிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து சுமார் 75,000 தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டுள்ளனர். சுமார் 6,000 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 5,000 பேர் முஸ்லிம் வெறியர்களினாலேயே கொல்லப்பட்டுள்ளனர்.

இன்று தென்தமிழீழம் முழுவதுமே சிங்களப் பேரினவாதிகளினதும் முஸ்லிம் வெறியர்களினதும் சிறையாகவே இருக்கின்றது அதற்குள் அகப்பட்டுள்ள தமிழர்கள்- அவர்கள் வீடுகளில் வாழ்ந்தாலும் சரி - அகதிமுகாம்களில் வாழ்ந்தாலும் சரி - கைதிகளைப் போன்றே வாழ்ந்து வருகின்றார்கள்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

# சாவின் சாவு

"என்ன?"

வெறும் கேள்வியாய் இது எழவில்லை! ஆச்சரிய ஒலியாயும் விழவில்லை! அதட்டலாய் — ஆவேச முழக்கமாய் அதிர்ந்தது!

சாவின் அரசன் தன் கருங்கோலைக் கீழே இடித்து அதிர வைத்தபோது ஆர்த்த முழக்கமே இது!

சிம்மாசனம் பதறிற்று. எதிர் நின்ற ஏவற் கணங்கள் நடுங்கின! விழிகள் பிதுங்க அவை தம் நாவை அசைக்க முயன்றன!

"என்ன?"

மீண்டும் அதே ஆர்த்தல் முழக்கம்! கோபாக்கினியின் வீச்சு!

"உண்மைதான் அரசே" என்றன அவை, அடித்தளக் குரலில்!

"நான் சொன்னதைச் செய்தீர்களா?"

"செய்தோம்! ஆகாய விமானத்தின் வேகத்தைப் பெருக்கினோம்! குண்டின் வீச்சை விசை ஆக்கினோம்! பொழிந்தோம் நெருப்பை! பூமி புகை மண்டலம் ஆயிற்று. பச்சனவு யாவும் கருகின!"

"பிஞ்சுக் குழந்தைகளும் பாலூட்டும் தாய்மாரும் ஓலமிடும் முன்னரே உயிர் துறந்தனர்".

"சாம்பல் பூத்த மண். சிதறிச் செத்த உடலங்கள்! இவற்றையே விட்டு வந்தோம்!" என மெல்லெனத் தொடங்கி வரிசையை நீட்டின ஏவற் கணங்கள்!

சா அரசன் சிரித்தான்! கோபச் சிரிப்பு அல்ல. ஏளன நகைப்பும் அல்ல- ஏமாற்ற நடை!

"சாகடித்துப் பயன் என்ன?" என்றான் அவன்!

ஏவல்கள் அதிசயத்தில் திகைத்தன!

"சாவுதான் எம் வடிவம் அல்ல, மூண்டங்களே!" என முழங்கினான் அவன்! மீண்டும் அழுத்தமாய்க் கூறினான்:

"எம் ஆட்சி நீடிப்பது எதனால்? சாவினாலா?"

விளங்காது பிதுங்கின கீழ் நின்றவை!

"மக்கள் உயிர் வாழ்வதால்தான் நாம் ஆள்கிறோம்!" என்றான் அவன்.

எதுவும் விளங்கவில்லை அவைக்கு!

"மரணம் எமக்கு ஒரு கண வெற்றி மட்டுமே! எம் நீடித்த வெற்றியும் நீடுமி ஆட்சியும் எதனால் நிலைக்கிறது?

— சாவினால் அல்ல!"

"அப்படியானால்?"

"எமக்கு வேண்டுவது செத்த உடலங்கள் அல்ல! சாவிலும் பார்க்க, சாவின் நினைவிலே ஏங்கி அடிபணிந்து நடுநடுங்கும் உள்ளங்களே எங்கள் நிரந்தர இடங்கள்!

நினைத்துக் கொள்ளுங்கள்! சா என்ற எமது கொடிக்கம்பம் பயம் என்ற பூமியில்தான் ஊன்றிப் பறக்க முடியும்! இதைச் செய்தீர்களா?"

பேய்கள் மௌனமாய் நின்றன.

அரசன் உற்று நோக்கினான். தன்னைப் பிறர் அறியாத அருவம் ஆக்கினான்.

சிம்மாசனம் வெறுமையாய்க் கிடந்தது.

பொழுது கழிந்தது.

மீண்டும் அவன் வந்து அமர்ந்தபோது தலை சிறிது நரைத்திருந்தது. இவ்வளவு மாற்றமா? என்ன....? எமக்குச் சவாலா?

இவ்வேளை-பூமியிலிருந்து புது இசையின் தாக்கம் எழுந்துகொண்டிருந்தது.

"அச்சமில்லை! அச்சமில்லை!"

பூமியின் வெடிப்புக்கள் தந்த சங்க நாதம்! குழந்தைகளின் குரல் ஒலி! ஆண் பெண் அனைவரின் கோஷம்! போர்!

வெருட்டலும் கொடுமைக் கும்மாளங்களும் களைத்து ஓடி மறைந்துகொண்டிருந்தன.

பூமியில் புத்துயிர்!

அஞ்சாமை, ஆற்றல், வீரம்!

சாவின் சாவு!

பூமியில் மீண்டும் பசுமை,
புத்தொளி! விடுதலை வாழ்வு!

வாழ்வு!

— நாக. பத்மநாதன் ✻

## தமிழீழ விடுதலை...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலும், இம்மக்களது தலை முஸ்லிம் வெறியர்களாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

அகதிமுகாம்களுக்குச் சிங்களப்படையினருடன் செல்லும் முஸ்லிம்களே, யாரைக் கைதுசெய்வது எனத் தீர்மானிக்கிறார்கள்.

தென்தமிழீழத்திலுள்ள அகதி முகாம்களில் உதாரணமாக கிளப் பன்பேக் (திருமலை), வந்தாறுமூலை பல்கலைக்கழக அகதிமுகாம்களில் நடைபெற்ற கைதுகளுக்கும் கொலைகளுக்கும் சூத்திரதாரிகள் முஸ்லிம் வெறியர்களாகவே இருக்கின்றனர்.

### முஸ்லிம் மக்கள் உணரவேண்டியஉண்மை

தமிழர்களை அழிப்பதன்மூலம் தங்களது சுதந்திரம், தனித்துவம், இறைமை பாதுகாக்கப்படும் என முஸ்லிம்கள் கருதுகிறார்கள் போல் தோன்றுகிறது. அதன்மூலம் தான் முஸ்லிம் மக்களுக்கு நிரந்தரப் பாதுகாப்புக் கிடைக்கும் எனவும் நம்புகிறார்கள் போலும்.

இங்கே புலிகளாகிய நாங்கள் கூறவிரும்புவது என்னவென்றால், எதிரி யார்? நண்பன் யார்? என்பதைத்தான்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்களது அரசியல் எதிர்காலமும் பொருளாதார சுபீட்சமும், தமிழீழத்தில்தான் இருக்கப்போகின்றது.

தமிழீழம்தான் முஸ்லிம்களின் தாயகமுமாகும்.

தமிழ்த் தேசிய இனத்தின் ஓர் அங்கமான முஸ்லிம்கள் தமிழர்களின் விரோதிகள் அல்ல; இவர்கள் தமிழர்களுடன் இணைந்து வாழ வேண்டியவர்கள்.

தமிழ்மக்கள் முஸ்லிம் மக்களின் விரோதிகளுமல்லர்; பகைவர்களுமல்லர்.

முஸ்லிம்களின் உண்மையான விரோதிகள் சிங்களப் பேரினவாதமும் இந்திய ஏகாதிபத்தியமுமே யாகும்.

இந்த உண்மையை உணர்ந்து. முஸ்லிம்கள் தமது தமிழர்விரோத உணர்வைக் கைவிடவேண்டும்; தமிழர்களுடன் ஒன்றிணைந்து வாழ்வதில்தான் முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலமே தங்கியுள்ளது. ✻

> தமிழீழ மக்களாகிய நாம் ஒரு தேசிய கட்டமைப்பைக் கொண்டவர்கள். வரலாற்று ரீதியாக நாம் ஒரு தேசியமாக வாழ்ந்து வந்தோம். தேசியமாகவே வாழ்ந்துவருகின்றோம். தேசியமாகவே வாழப்போகின்றோம். எமது தேசியத்தை எதிரியானவன் ஏற்றுக்கொண்டாலும்சரி, ஏற்றுக் கொள்ள மறுத்தாலும்சரி எமது தேசிய தனித்துவமானது என்றும் அழிக்கமுடியாத எதார்த்தமான அரசியல் உண்மை என்பதை நாம் உலகிற்கு சதா பிரகடனம் செய்துகொண்டே இருப்போம்.
>
> — தலைவர் வே. பிரபாகரன்.

## இரண்டு வருடப்போர்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரும்பவில்லை என்பதை, இந்த இரண்டுவருடப் போர் நிரூபித்துள்ளது. அதேசமயம், இராணுவ வழி மூலமும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதையும் இந்த இரண்டு வருடப் போர் உணர்த்தியுள்ளது. அப்படியாயின் ஏன் பாரிய பொருட்செலவுடனும் இழப்புகளுடனும், சிங்கள அரசு இப்போரைத் தொடர்ந்துகொண்டிருக்கின்றது?

இதற்கு உள்நாட்டு அரசியல்-சமூக - பொருளாதார நிர்ப்பந்தங்களும், வெளிநாட்டு அழுத்தங்களுமே காரணம்.

இந்த இரண்டு வருடப் போரிலிருந்து எமது மக்கள் ஒரு உண்மையை உணரவேண்டும். அதாவது எமது மக்களுடைய தேசியஇனப்பிரச்சினைக்கு சிங்கள அரசுமூலமோ வெளிநாட்டுத் தலையீடுகள் மூலமோ தீர்வுகாண முடியாது. மாறாக, எமது மக்கள்தான் தொடர்ந்தும் இப்போராட்டத்தை முன்னெடுத்துச் சென்று, தமிழீழ நிலப்பரப்பில் எமது தன்னாட்சி உரிமையை நிலைநாட்டி, ஒரு தனியரசொன்றை அமைக்க வேண்டும்; இதைத் தவிர வேறு வழியேதும் இல்லை.

இதைத்தான் இந்த இரண்டு வருடப் போர்க்கால நிகழ்வுகளும் எமது மக்களுக்கு இடித்துரைக்கின்றன.

அதேசமயம், சில வரலாற்று நிகழ்வுகளையும் இப்போர்க்காலத்தில் நாங்கள் படைத்துள்ளோம்.

1991 ஆம் ஆண்டு யூன் மாதம் யாழ் குடாநாட்டில்கோலாகலமாக ஒரு முத்தமிழ் விழாவை நடாத்தினோம். தொன்மையும் - பெருமையும் மிக்க எமது மொழிக்கும்- கலைக்கும் நாங்கள் விழா எடுத்திருந்தோம்.

இந்தவிழாவின் ஓர் அங்கமாக 'மாமனிதர்' விருதும் வழங்கப்பட்டது. பல்துறைகளிலும் தேசிய தொண்டாற்றிய இந்த மண்ணின் மைந்தர்களுக்கு இவ் விருதுகள் வழங்கப்பட்டன.

இவ்விருதுகளை தலைவர் பிரபாகரன் அவர்களே நேரடியாக மக்கள்முன் மேடையில் தோன்றி வழங்கினார்.

1991 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆம் திகதி அதாவது போர் தொடங்கிச் சரியாக ஒரு வருட பூர்த்தி நாளன்று, சாவகச்சேரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் இச் சரித்திர நிகழ்வு நடந்தது. அங்கே தலைவர் அவர்கள் மக்கள் முன் ஒரு சிறப்புரையாற்றியதும் குறிப்பிடத்தக்கது. ✻

# மணலாற்றில் மீண்டுமொரு வீரகாவியம்

போர் தொடங்கிய இந்த இரண்டு வருட காலப்பகுதியிலும் மணலாற்றை ஆக்கிரமிப்பதைக் குறிக்கோளாகக்கொண்டு, மூன்று இராணுவ நடவடிக்கைகளை சிங்களப் படைகள் மேற்கொண்டுள்ளன.

ஆனாலும், மணலாற்றைக் கைப்பற்ற அவர்களால் முடியவில்லை.

மணலாற்றைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் புலிவீரர்கள் தாங்கள் தமிழீழ தேசத்தின் இதயத்தைப் பாதுகாப்பதாகவே கருதுகின்றார்கள்.

மணலாற்றை ஆக்கிரமிக்க முனைந்த இந்த மூன்று தடவைகளிலும் சிங்களப் படை 400இற்கு மேற்பட்ட படையினரை இழந்தது.

இந்த மூன்று தடவைகளும் மணலாறு எதிரியால் ஆக்கிரமிக்கப்படாது தடுப்பதற்காக நடந்த சமர்களில், சுமார் 275 புலிவீரர்கள் வீரச்சாவைச் சந்தித்து வீரகாவியம் படைத்துள்ளனர்.

மணலாற்றுப் பகுதியைக் கைப்பற்றுவதற்காக சிங்களப் படைகள் மீண்டுமொரு இராணுவ முயற்சியை மேற்கொண்டுள்ளன.

'மே' மாதம் 28 ஆம் திகதியன்று முல்லைத்தீவு இராணுவத் தளத்திலிருந்து டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் வான்படை-கடற்படை ஆகியவற்றின் உதவியுடன் மணலாற்றை நோக்கிப் படையெடுத்து வந்தனர். இவர்களது முயற்சி அலம்பிலுடன் தடுத்துநிறுத்தப்பட்டுள்ளது.

அலம்பிலில் முகாமிட்டிருந்த படையினர் யூன் மாதம் 8 ஆம் திகதி, அலம்பிலிருந்து 10 கி.மீ. தூரத்திலிருந்த குமுழமுனை நோக்கி கவசவாகனங்கள் சகிதம் நகரத் தொடங்கினர். இவர்களை அலம்பிலிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ள தங்கபுரம் என்ற இடத்தில் வைத்து, எமது வீரர்கள் வழிமறித்துத் தாக்கினார்கள்.

உக்கிரமாக நடந்த இம்மோதலில் புலிவீரர்கள் காட்டிய தீவிர எதிர்ப்பால், தங்கபுரத்திற்கு அப்பால் நகரமுடியாது இராணுவத்தினர் தடுமாறினர். அந்தநிலையில் எமது போராளிகள் தொடுத்த துணிகரமான - வேகமான தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவம் பெரிய இழப்புகளுடன் அலம்பில் நோக்கிப் பின்வாங்கி ஓடத்தொடங்கியது.

பின்வாங்கத்தொடங்கிய படையினர் அலம்பில் சென்றடையும் வரை எமது வீரர்களின் ஆவேசத் தாக்குதல்களுக்கு உள்ளாகினர்.

இப் பின்வாங்கல் காரணமாக, குமுழமுனையைக் கைப்பற்றி, அங்கிருந்தும் அலம்பிலிலிருந்தும் மணலாற்றுக் காட்டுப்பகுதியை நோக்கி நகர இருந்த இராணுவத்தின் திட்டம், முறியடிக்கப்பட்டது.

தற்போது அலம்பிலில் தரித்து நிற்கும் இராணுவம், மீண்டும் முல்லைத்தீவு இராணுவத் தளத்தினைச் சென்றடைய முடியாதும் மணலாற்றை நோக்கி நகரமுடியாதும், திரிசங்கு சொர்க்க நிலையில் உள்ளது.

இவ்விதமாக மணலாற்றின் மீது தொடுக்கப்பட்ட மூன்றாவது இராணுவ நடவடிக்கையையும் முறியடித்து, மீண்டுமொரு வீரகாவியத்தைப் புலி வீரர்கள் மணலாற்றில் படைத்துள்ளனர்.

இந்த இரண்டுவருடகாலப்பகுதியிலும் மணலாற்றைக் கைப்பற்றுவதைக் குறியாகக் கொண்டு நடாத்தப்பட்ட, மூன்றாவது படையெடுப்பு இதுவாகும்.

முதலாவதாக, 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுச் சமர் முடிந்தவுடன் ஒக்டோபர் 29 ஆம் திகதி, 'மின்னல்' என்ற பெயரில் மணலாற்றுப் பகுதியில் ஒரு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இப்படையெடுப்பின் ஆரம்பக் கட்டத்திலேயே எதிரிக்குப் பலத்த அடியொன்று கொடுத்து, அவனது முயற்சியை முறியடித்தமை குறிப்பிடத்தக்கது. (இதில் சிங்கள இராணுவத்திடமிருந்து பின்னுதைப்பற்ற பீரங்கி ஒன்றையும் கைப்பற்றியிருந்தோம்.)

இதுவரைகாலமும் மணலாற்றுப் பகுதிமீது படையெடுக்கும்போது, மணலாற்றின் தெற்குப் பக்கமிருந்துதான் சிங்களப்படைகள் நகரத்தொடங்குவது வழமை.

ஆனால் இம்முறை, வடக்குப் பக்கமாக முல்லைத்தீவுத் தளத்திலிருந்து இராணுவம் படைஎடுத்து, அலம்பில் வரை வந்துள்ளது.

முன்னர் தெற்குப் பக்கமிருந்து சிங்களப்படைகள் நடாத்திய இரண்டு படையெடுப்புக்களும் அவர்களுக்குத் தோல்வியில் முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

மணலாற்றுப் பகுதியை ஆக்கிரமிக்கும் நோக்குடன் நடந்துமுடிந்த இந்த மூன்று இராணுவ நடவடிக்கைகளிலும், சிங்களப் படை 400 இற்கும் மேற்பட்ட படையினரை இழந்துள்ளது. 150 இற்கும் மேற்பட்டவர்கள் எமது மிதிவெடிகளில் சிக்கிக் கால்களை இழந்துள்ளனர்.

இருந்தபொழுதிலும் மணலாற்றுப்பகுதியை என்ன விலை கொடுத்தேனும் கைப்பற்றுவது என்பதில், சிங்களப் படைத்துறைத் தலைமை விடாப்பிடியாக உள்ளது.

காரணம், மணலாற்றின் புவியியல் ரீதியான அமைவிடம்தான்.

வட - தென் தமிழீழத்தை இணைக்கும் நிலப்பகுதியாக மணலாறு அமைந்துள்ளதுதான் மணலாற்றின் இராணுவ - அரசியல் முக்கியத்துவத்திற்குக் காரணம் ஆகும்.

சிறீலங்கா அரசின் பிரதான குறிக்கோள் வட - தென்தமிழீழத்தை நிரந்தரமாகத் துண்டித்து தென்தமிழீழத்தைச் சிங்களமயப் படுத்துவதுதான்.

இந்த நோக்கத்தை அடைய வேண்டுமானால், தமிழீழத்தின் மையமாக இருக்கும் மணலாறு சிங்களப் படைவசமாக வேண்டும்.

இந்த நோக்கத்தை அடையத்தான் மாறி மாறி மணலாற்றின் மீது சிங்களப் படை படையெடுத்துக் கொண்டிருக்கின்றது.

ஆனால் புலிகளாகிய நாங்கள் மணலாற்றை தமிழ்த் தேசத்தின் இதயம்போலக் கருதி, அதைப் பாதுகாக்க எமது உயிர்களையே விலையாக்கிக் கொண்டிருக்கின்றோம்.

எதிரி நடாத்திய இந்த மூன்று படையெடுப்புக்களிலிருந்தும் மணலாற்றைப் பாதுகாப்பதற்காக சுமார் 275 புலிவீரர்கள் வீரச்சாவைச் சந்தித்துள்ளனர்.

மணலாற்றைக் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு புலிவீரர்களும் தாங்கள் தமிழீழத்தின் இதயத்தைப் பாதுகாப்பதாகவே கருதிக் கொள்கின்றார்கள்.

அதனால் அதீத உறுதியையும், வியக்கத்தக்க போர்த்திறனையும் வெளிக்காட்டியபடி எமது போராளிகள் போர்புரிந்துகொண்டிருக்கின்றார்கள். ❋



மணலாற்றுச் சமர் முனையில் புலிவீரர்கள்.

**மணலாற்றில் சமர்புரியும் ஒவ்வொரு புலிவீரனும், தான் தமிழீழ தேசத்தின் இதயத்தைப் பாதுகாப்பதாகவே நினைத்துக் கொள்கிறான். அதனால், அதீத உறுதியையும், வியக்கத்தக்க போர்த்திறனையும் காட்டி எமது போராளிகள் அங்கு போரிடுகின்றார்கள்.**

என்ற பெயருடன் மணலாற்றுக் காட்டின்மீது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றைச் சிங்களப் படைகள் எடுத்தன.

மழைபோல வானிலிருந்து குண்டுகள் கொட்டப்பட்ட பொழுதிலும் கூட, மணலாற்றைப் பாதுகாக்கும் உறுதியுடன் நின்ற புலிவீரர்கள் சிங்களப்படைமீது எதிர்த்தாக்குதல் தொடுத்தனர்.

தனது படையில் 200இற்கும்மேற்பட்டோரை இழந்த நிலையில் மணலாற்றைக் கைப்பற்ற முடியாது சிங்களப் படைகள் பின்வாங்கின.

அடுத்ததாக, 1992 ஆம் ஆண்டு மார்ச் 17 ஆம் திகதி, 'கயேபகர'

## இராணுவத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களமயப்படுத்தலாம் என, சிறீலங்காப் பேரினவாத சக்திகள் எதிர்பார்க்கின்றன.

இவ்விதம் செய்வதன்மூலம் தமிழரின் தேசிய பலத்தைச் சிதைத்துப் போராட்டத்தை நசுக்கலாம் என, சிங்கள ஆளும் வர்க்கம் எண்ணுகின்றது.

தமிழ்த் தேசியத்திற்கெதிரான இவ் அரசியல் இலக்கை அடைவதற்கான இராணுவத் திட்டத்தின் ஒரு பகுதி ஏற்கெனவே தொடங்கிவிட்டது.

பலாலி தளத்தைச் சூழவும், முல்லைத்தீவிலிருந்து மணலாறு நோக்கியும், இரண்டு இராணுவ நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுவிட்டன.

இந்த இரு இடங்களிலும் நடைபெற்ற சண்டைகளில் சில உயர்நிலை அதிகாரிகள் உட்பட 100இற்கும் மேற்பட்ட படையினரைச் சிங்களப் படை இழந்துள்ளது.

இவ்விதமாக, ஆரம்பக்கட்டத்திலேயே சிங்களப்படைக்கு பலத்த இழப்பு ஏற்பட்டபோதிலும், தனதுஇராணுவத் திட்டத்தை நிறைவேற்றுவதில், சிங்கள இராணுவத் தலைமைப்பீடம் உறுதிபூண்டு நிற்பதுபோலத் தெரிகின்றது. ❋

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**